# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூன் 2010 ஜீவியம் 16 மலர் 2

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் ........ 2
இம்மாதச் செய்தி ........ 12
அன்பர் கடிதம் ........ 13
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 15
சாவித்ரி ........ 25
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 27
யோக வாழ்க்கை விளக்கம் V ........ 28
அஜெண்டா ........ 36
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 38
அன்னையின் கைக்குட்டை ........ 40
லைப் டிவைன் - கருத்து ........ 63

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**அவர் பெறாத பேற்றை உலகத்திற்கு அளிக்கும் அருள் ஸ்ரீ அரவிந்த தரிசனம்.**

**படிக்காதவன் நூலகத்தை வைத்துக் கொண்டிருப்பது போல நாம் அன்னையை வைத்துக் கொண்டிருக்கிறோம்.**

**அன்னையை ஏற்றுக் கொள்வதைவிட நாம் இப்பொழுது இருக்கின்ற நிலையை விடுவது கடினம்.**

**ஆயிரம் யுகம் கடந்து அன்னை அழைத்துச் சென்றாலும் அவசரமாக நாம் பழைய இடத்திற்குத் திரும்புகிறோம்.**

# லைப் டிவைன்

கர்மயோகி

## XX. Death, Desire, and Incapacity

In the last chapter we considered Life. Page No.188
It is from the material point of view. Para No.1
It is an appearance.
It is the appearance of the vital principle working in Matter.
This is evolutionary terrestrial existence.
It offers data.
We have reasoned from this data.
Appearance is not all.
It may work however.
It may work under various conditions.
Still there is a general principle.
It is the same everywhere.
Life is a universal Force.
It is working to create forms.
It energises these forms.
Also these forms are maintained and modified.
It is done by mutual play.
Interchange too does it.



## 20. மரணம், ஆசை, இயலாமை

சென்ற அத்தியாயத்தில் வாழ்வைக் கண்டோம்.
அது ஜடத்தின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது.
அது தோற்றம்.
ஜடத்தில் உயிர் செயல்படும் கோணமது.
அது பூவுலகில் பரிணாம வாழ்வு.
அது விவரங்கள் நிறைந்தது.
அந்த விவரமூலம் நாம் சிந்தனை செய்தோம்.
தோற்றம் முடிவில்லை.
அது எப்படியும் செயல்படும்.
பல வகையாக செயல்படும் தன்மையுடையது அது.
எப்படியும் பொதுவான தத்துவமுண்டு.
எங்கும் அது ஒன்றே.
வாழ்வு பிரபஞ்ச சக்தி.
அது ரூபங்களைச் சிருஷ்டிக்கிறது.
ரூபங்கட்கு வாழ்வு சக்தியளிக்கிறது.
இந்த ரூபங்களைத் தாங்கி, மாற்ற வல்லது வாழ்வு.
ஒன்றுடன் ஒன்று கொள்ளும் முறையால் இது நடைபெறுகிறது.
பரிமாறுவது பலன் தரும்.

It can dissolve forms.
Even reconstruct them.
These changes can be substantial.
It is a conscious energy.
It acts overtly or secretly.
It is its fundamental character.
We inhabit the material world.
There Mind is involved.
It is subconscious in Life.
We know the Supermind is involved in Mind.
There it is subconscious.
So also Mind is subconscious here.
Again Life is involved in Matter.
Therefore Matter is the basis here.
Matter is the appearance and beginning.
Matter is *Prithivi* for the Upanishads.
It is the Earth-principle.
It is our foundation.
Ours is the material universe.
The material universe starts from the formal atom.
It is surcharged with energy.
It is instinct with the unformed stuff.
The stuff is of a subconscious desire, will and intelligence.
Life is apparent.
It manifests out of Matter.
Its body is living.
Mind is imprisoned within it.
Life delivers Mind out of itself.
Supermind is within Mind.
It is concealed within its workings.



வாழ்வு ரூபத்தை அழிக்கும்.
புதியதாகவும் மாற்றும்.
இம்மாறுதல்கள் பெரியதாகவுமிருக்கும்.
வாழ்வு தன்னையறியும் சக்தி.
இது நேரடியாகவும் மறைமுகமாகவும் செயல்பட வல்லது.
அதன் அடிப்படை சுபாவமது.
நாம் ஜட உலகில் வாழ்கிறோம்.
மனம் அதனுள் பொதிந்துள்ளது.
மனம் வாழ்வில் மறைந்துள்ளது.
அதனால் மனம் வாழ்வில் ஆழத்தில் புதைந்துள்ளது.
சத்தியஜீவியம் மனத்துள் உள்ளதுஎன அறிவோம்.
அது மனத்தில் மறைந்திருப்பதுபோல் மனம் வாழ்வில் மறைந்துள்ளது.
மீண்டும் வாழ்வு ஜடத்துள் புதைந்துள்ளது.
எனவே ஜடம் அடிப்படை.
ஜடம் தோற்றம், ஆரம்பம்.
உபநிஷதம் ஜடத்தை *பிரித்திவி* என்கிறது.
இது பூமியின் தத்துவம்.
அது நம் அஸ்திவாரம்.
நாம் வாழும் உலகம் ஜட உலகம்.
ஜடலோகம் அணுவிலிருந்து ஆரம்பிக்கிறது.
அணு சக்தியால் நிரம்பியது.
உருவம் பெறாத பொருள் அதனுள் உள்ளது.
இப்பொருள் ஆழ்மன ஆசை, புத்தி, உறுதியாலானது.
வாழ்வு தோற்றம்.
அது ஜடத்தினின்று உற்பத்தியாவது.
அதன் உடலுக்கு உயிருண்டு.
மனம் அதனுள் சிறைப்பட்டுள்ளது.
வாழ்வு மனத்தை உடலிலிருந்து விடுவிக்கிறது.
சத்தியஜீவியம் மனத்துள் உள்ளது.
மனத்தின் செயல்பாட்டில் சத்தியஜீவியம் புதைந்துள்ளது.

Mind delivers Supermind out of itself.
We can conceive another world.
It is constituted without Mind involved in it at the start.
That world has innate energy.
It can use that energy consciously.
That energy can create original forms of substance.
It will not be subconscious in the beginning.
The working of such a world will be different.
It will be different from ours.
There will be an intermediate vehicle of operation.
It will be always life.
The process is entirely reversed.
Still, the thing would be the same.

Immediately something appears. Page No.182
Mind is the final operation of Supermind. Para No.2
Life is the final operation of Consciousness-Force.
Real-Idea is the determining force of that Force.
It is also the creative agent.
Consciousness is the Force.
It is the nature of Being.
And this is a Conscious Being.
It manifests as creative Knowledge-Will.
It is the Real-Idea.
Or it is the Supermind.
The supramental knowledge-will is Consciousness-Force.
This is how one is rendered operative for creation of forms.
They are the forms of united being in ordered harmony.
We call that harmony world or universe.
Mind and Life are the same Consciousness-Force.



மனம் சத்தியஜீவியத்தைத் தன்னுள்ளிலிருந்து விடுதலை செய்கிறது.
நாம் வேறு உலகத்தை சிந்திக்கலாம்.
ஆரம்பத்தில் அது மனம் சிறைப்பட்டதாக இருக்காது.
அவ்வுலகிற்கு உள்ளுறை சக்தியுண்டு.
அந்த சக்தியை அவ்வுலகு தன் விருப்பப்படிப் பயன்படுத்தலாம்.
அந்த சக்தி பொருளின் ரூபத்தைப் புதியதாக சிருஷ்டிக்கலாம்.
ஆரம்பத்தில் அது ஆழ்ந்து மறைந்திருக்காது.
அந்த உலகம் மாறுபட்டதாக இருக்கும்.
நம் உலகினின்று அது மாறுபட்டிருக்கும்.
இடைப்பட்ட கருவி செயல்பட எழும்.
அது வாழ்வாக இருக்கும்.
செயல்முறை முழுவதும் தலைகீழேயிருக்கும்.
இருப்பினும், அது பழைய நிலைக்குரியதாக இருக்கும்.

உடனே புதியதாக ஒன்று தோன்றும்.
மனம் சத்தியஜீவியத்தின் பரிணாம முடிவு.
வாழ்வு அதேபோல் சித்-சக்தியின் முடிவு.
ஜீவனுள்ள எண்ணம் அச்சக்தி செயல்படுவதை நிர்ணயிக்கும்.
ஜீவனுள்ள எண்ணம் சிருஷ்டிக் கர்த்தா.
ஜீவியம் சக்தி.
சக்தி ஜீவனின் இயற்கை.
அது தன்னையறியும் ஜீவன்.
ஜீவன் ஞானம்-உறுதியாக வெளிப்படுகிறது.
அது ஜீவனுள்ள எண்ணம்.
அல்லது அதை சத்தியஜீவியம்எனக் கூறலாம்.
சத்தியஜீவிய ஞானம்-உறுதிஎன்பது ஜீவியம்-சக்தியாகும்.
ரூபங்களை சிருஷ்டிக்க ஞானம்-உறுதி இப்படி மாறுகிறது.
ஐக்கியமான ஜீவனின் ரூபங்கள் முறையான சுமுகத்தில் இப்படி உள்ளன.
இந்த சுமுகம் உலகம், பிரபஞ்சம்.
மனமும் வாழ்வும் இதே ஜீவியம்-சக்தி.

It is the same Knowledge-Will.
This is operating for the maintenance of distinctly individual forms.
It is a form of being that works out its own mind and life.
They look as if they are separate from the others.
In fact they are never separate.
But they are the play of the Soul, Mind, Life.
They are different forms of a single reality.
We can put it in other words.
Supermind is all-comprehending and all-apprehending.

Mind is the final individualising operation.
Consciousness works by a process.
It is individualised in each form.
It does so from the standpoint proper to it.
It works in the cosmic relations.
This proceeds from that standpoint.
There is a Force of Conscious-Being.
It works through the all-possessing and all-creative will.

It is the Will of the universal Supermind.
It maintains and energises Life.
It constitutes and reconstitutes individual forms and acts.
It acts in them as the basis of all the activities of the soul.

They are thus embodied.
Life is the energy of the Divine.
It is continually generating itself in form.
It acts like a dynamo.



அதுவே ஞானம்-உறுதி.
தெளிவான தனிமனித ரூபங்களை நிர்வாகம் செய்யும் செயல்முறை இவை.
இது ஜீவனின் ரூபம். தன்மனம், வாழ்வை இதுவே உற்பத்தி செய்கிறது.
மற்றவற்றிலிருந்து பிரிந்தவைபோல அவை தோன்றுகின்றன.
உண்மையில் அவை எப்பொழுதும் பிரிந்தவையில்லை.
ஆத்மா, மனம், வாழ்வின் லீலைகள் அவை.
அவை அனைத்தும் ஒரே சத்தியத்தின் பல உருவங்கள்.
இதை வேறு சொற்களால் கூறலாம்.
அனைத்தையும் தன்னுட்கொண்டு, அனைத்தையும் புறத்தில் காண்பது சத்தியஜீவியம்.
மனம் முடிவான தனி நபர் செயல்.
ஜீவியம் ஒரு செயல் முறைப்படி செயல்படுகிறது.
இது ஒவ்வொரு ரூபத்திற்கும் தனிப்பட்டது.
அதன் அடிப்படைக்கு ஏற்ப இது செயல்படுகிறது.
பிரபஞ்ச தொடர்புப்படி அது செயல்படுகிறது.
அதன் அடிப்படையினின்று இது எழுகிறது.
தன்னையறியும் ஜீவனின் சக்தியிது.
அனைத்தையும் சிருஷ்டிக்கும் அனைத்தையும் உட்கொண்ட உறுதிமூலம் இது செயல்படுகிறது.
பிரபஞ்ச சத்திய ஜீவியத்தின் உறுதியிது.
இது வாழ்வை சக்தியால் நிரப்பி நடத்துகிறது.
தன் ரூபங்களை அது சிருஷ்டித்து, மீண்டும் மறு உருவம் தருகிறது.
ஆத்மாவின் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இது செயல்படுகிறது.
இவை இப்படி உருவம் பெற்றுள்ளன.
வாழ்வு தெய்வத்தின் சக்தி.
இடைவிடாது வாழ்வு ரூபங்களை உற்பத்தி செய்கிறது.
வாழ்வு டைனமோவாகச் செயல்படுகிறது.

It plays with the outgoing battery of its shocks on the surrounding form of things.
It also receives itself the incoming shock.
It is the shocks of all life around.
They pour in upon it.
They penetrate from outside from the environing universe.

*Contd….*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சொந்தமான சிந்தனைக்கு மனம் அளவு கடந்த சக்தியைச் சேகரம் செய்ய வேண்டும். அது கடினம் என்பதால் நாலு பேர் சொல்வதைத் தன் அபிப்பிராயமாக மனிதன் ஏற்றுக் கொள்கிறான்.

***நாலுபேர் சொல்வதை நானும் சொல்கிறேன்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இலட்சியமும் வெற்றிபெற அதற்கெதிரான முறையைக் கையாள வேண்டும். இலட்சியம் அகவாழ்வுக்குப் போய் வலிமை பெற்று புற வாழ்வை மீறினால் வெற்றி பெறும். வலிமையே வெற்றி பெறும்என்ற லௌகீகச் சட்டமே அப்பொழுதும் நிலைக்கிறது.

***வலிமைக்கு மட்டுமே வெற்றி.***



சுற்றுப்புறத்திலுள்ள பொருள்கள்மீது எழும் அதிர்ச்சி அது வெளிப்படும் பாட்டரியாகிறது.
தன்னை நோக்கிவரும் அதிர்ச்சியை ஏற்றுக் கொள்கிறது.
சுற்றியுள்ள வாழ்வனைத்தும்தரும் அதிர்ச்சியது.
அவை வெள்ளமாக உள்ளே வருகின்றன.
சுற்றியுள்ள உலகினின்று வந்து வாழ்வை ஊடுருவுகின்றன.

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நண்பர் இருகட்சிகளாகப் பிரிந்து சவால்விட்டுத் தங்கள் திறமையைப் பதம் பார்த்தால் உடலின் திறமை செயல்பட்டு உணர்வில் நெருக்கத்தை அளிக்கும்.

***உணர்வில் நெருங்க பிரிந்து சவால் விடவேண்டும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அருளின் செயலை அறிந்து மனம் ஏற்றால், உள்ளிருந்து எழும் உந்துதல் எதிராக இருக்கும். அது அறிவை அறியாமையாக்கும். சமூகச் சட்டத்திற்கு அதை உட்படுத்தி, சட்டத்தை எதிரான நிலைக்கும் சொல்லி, கிடைத்த அறிவைப் பாழாக்கும்.

***அருளின் செயலை அறிந்தால்***
***அது அறிவை அறியாமையாக்கும்.***

## இம்மாதச் செய்தி

**எதையும் யாரையும்**

**கேட்க முடிவதில்லைஎன்பது**

**சமர்ப்பணம் பலித்த நிலை.**



## அன்பர் கடிதம்

தேவரீர் அப்பா அவர்களுக்கும் மற்றும் அன்னை அன்பர் அனைவருக்கும் எனது முதற்கண் நன்றி கலந்த வணக்கத்துடன் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரிடம் சமர்ப்பணம் செய்து இக்கடிதத்தை எழுதுகிறேன்.

இச்சிறியவனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வினைப் பதிவு செய்கிறேன். நான் அஞ்சல் துறையில் குளித்தலை தலைமை அஞ்சலகத்தில் பணிபுரிகிறேன். என் தவறினால் எனக்குக் கிடைக்க வேண்டிய arrears (நிலுவை தொகை) பணம் கிடைக்காமல் தள்ளிக் கொண்டே போனது. எப்பொழுதும் நம்முடன் இருக்கும் அன்னையை வேண்டி எனது மேலதிகாரியை பார்க்கச் சென்றபொழுது அவர் சம்மதித்து நாளை பணத்தைப் பெற்றுக் கொள்ள ஆணையிட்டார். அதன்பின் மறுநாள் குளித்தலையில் இருந்து கரூர் சென்றேன். செல்லும்பொழுது பேருந்தில் ஸ்ரீ அரவிந்தர் coin (ஸ்ரீ அரவிந்தர் 2 ரூ. நாணயம்) கிடைத்தது. ஸ்ரீ அரவிந்தர் coin கிடைத்தால் எனது பிரச்சினைகள் தீர்ந்துவிடும். எனது arrears பணத்தினை பெற்றுக் கொண்டு அன்னைக்கு நன்றி சொல்லியவண்ணம் இல்லம் வந்து சேர்ந்தேன். ஸ்ரீ அரவிந்தர் coinஐ எனது இல்ல பூஜை அறையில் வைத்துவிட்டேன். சில நாட்கள் கழித்து இரவில் சென்று அன்னையை வழிபடும்போது அங்கு coin இல்லை. எனது இளைய மகன்தான் எடுத்திருப்பான் என்பதை அறிந்து அவன் தூக்கத்தை கலைக்காமல் விட்டு காலை அலுவலகத்திற்குச் சென்றுவிட்டேன். இரவு 7 மணிக்கு இல்லத்திற்குத் திரும்பியவுடன் என் இளைய மகனிடம், ‘‘உன்னை நான் தண்டிக்கமாட்டேன். அன்னை கூறியிருக்கிறார்கள். உண்மையைக் கூறு’’ என்றேன். அவனே தவற்றை உணர்ந்து, ‘‘அப்பா, நான்தான் எடுத்தேன். என்னை மன்னியுங்கள்’’ என்றான். அருகில் உள்ள டீ கடையில் மிட்டாய் வாங்கி சாப்பிட்டேன் என்றான். அவன் குற்றத்தை உணர்ந்து திருந்தியது எனக்கு மகிழ்ச்சி தந்தது. உடனே அந்த டீ கடைக்குச் சென்று கடைக்காரரிடம் விவரத்தைக் கூறினேன். அவரும் தனது

கல்லாப்பெட்டியை திறந்து “இதோ இந்த coinதானா” என்றார். ஆம், இச்சிறியவனுக்குக் கிடைத்த அதே ஸ்ரீ அரவிந்தர் coin. சந்தோஷம். அன்னைக்கு நன்றி, நன்றி, நன்றி. என் மனதில் நன்றியை மட்டும் சொல்லிக்கொண்டே சென்றேன்.

எப்பிறவியில் என்ன நன்மை செய்தேனோ, நிரந்தர ஆனந்தம் நிலையாக வாழ்வில் வளம்பெற எல்லாம்வல்ல ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் பாதகமலங்களை சரணாகதி அடைந்து இக்கடிதத்தை அனுப்புகிறேன்.

அப்பாவிற்கு, தங்களின் சேவை இப்பூவுலகில் என்னை போன்ற பலருக்கும் கிடைத்து பலன் அடைந்திருக்கிறார்கள். அனைவரது சார்பிலும் என் நன்றி கலந்த நமஸ்காரத்தைத் தங்களின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

-- P.V. *கார்த்திகேயன், குளித்தலை*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வாழ்வின் அமைப்பு முறைக்கு அஸ்திவாரம் ஜடத்தின் தூய்மையான “நாணயம்”.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நண்பர்கள் இரு கட்சிகளாவது நமக்கு விளையாட்டு. பிரம்மம் இரு கூறுகளாகப் பிரிந்து தன் திறமைக்குத் தானே சவால் விடுதல், அதிகபட்ச ஆனந்தத்தைத் தருவதில் ஆச்சர்யம் இல்லை.

***பிரம்மம் இரு கூறுகளாகப் பிரிந்து விடும் சவால் லீலை.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

❑ **"காசு வரமாட்டேன் என்கிறது, மழை வருகிறது. மற்றவெல்லாம் தவறாமல் நடக்கின்றன".**

* ஒரு குடும்பத்தில் ஒரு பக்தரிருந்தால், அவருக்காக குடும்பத்தில் பல நல்லது நடக்கும். மற்றவர்கள் அந்த சௌகரியத்தை அனுபவிப்பார்கள். அனுபவிப்பது அன்னைக்கு எதிராக இருக்கும்.

தான் எதுவும் செய்யாமல் பல நல்லது நடப்பதுபோல் தன் அழிச்சாட்டியத்திற்கு அன்னை காசு தரவில்லைஎன ஒருவர் குறைப்படுவார்.

உழைப்பு காசு.

உழைப்புஎன்பது உடல் உழைப்பு.

உடலைக் கடந்தது உயிர். உயிரால் உழைப்பதுஎன்பது இனிக்கப் பழகுவது.

உயிரால் உழைத்தால் வரும் காசு பெரியது.

அதைக் கடந்தது மனம்.

மனத்தின் உழைப்பு யோசனை, அறிவு.

அறிவின் உழைப்புக்கு அதிகமான காசு வரும். அது பணமாகும்.

அறிவை ஏற்று உடல் உழைத்தால் அபரிமிதமான பணம் பெருகும்.

அறிவையும், உயிரையும் ஏற்ற உழைப்பு, பெறுவது செல்வம்.

**அறிவு செயலில் பிறர் இனிக்க வெளிப்படுவது பெருஞ் செல்வம்.**

ஆத்மா மௌனமானது.

ஆத்மாவின் உழைப்பு அகிலத்தின் செல்வம்.

அன்னையின் சூழல் ஆத்மாவின் உழைப்பின் பலன் தரும்.
அது அருள்.
அருள் மழையாக வருகிறது.
மழை வருகிறதுஎனில் அனைத்துமிருக்கிறதுஎனப் பொருள்.
**இருப்பதை இதமாக ஏற்று இனிக்கச் செயல்படுவது செல்வம் தானே பெருகுவதாகும்.**

காசு வரவில்லைஎனில் உழைப்பில்லைஎனப் பொருள் அல்லது குதர்க்கமிருப்பதாகப் பொருள்.
பிறர் பொருளை மனம் நினைத்தால் தனக்கு வரவேண்டிய பொருள் வாராது.
காணிக்கை இறைவனின் பொருள்.
வால்டருக்கு காணிக்கைத் தர முடியவில்லை.
கோடி கோடியாக வந்தும் கையில் எதுவும் வரவில்லை.
போர் முதலியார் (water diviner) குதர்க்கம்.
குதர்க்கம் கோணல் பேசும்.
குதர்க்கமும் மாறி காணிக்கை கொடுத்து பெருஞ்செல்வம் பெற்றது.
போர் முதலியார் (water diviner)க்கு எஸ்டேட் முதலாளி கண்ணுக்குத் தெரிந்தது.
போர் முதலியார் தண்ணீர் கண்டுபிடித்து வாழ்க்கை நடத்துபவர்.
ஆரோவில்லுக்கு 19 இடங்களைச் சேவையாக அவர் கண்டுபிடித்துக் கொடுத்தார். ஓர் அன்பருக்கு 10 கிணறு போட உதவினார். அன்பர் பெருநிலம் வாங்கி அங்கே கிணறு தோண்ட முதலியாரைக் கூப்பிட்டார். அன்பருக்கு பெருமுதலாளி நண்பர். நண்பர் பெருந்தரித்திர அம்சம் உடையவர். முதலியாருக்கு தரித்திரமோ, அன்பரோ கண்ணுக்குத் தெரியவில்லை. 'முதலாளி' தெரிகிறது. அவரைக் கூப்பிட்டார். நிலத்தில் ஏற்கனவே நீருள்ள இடங்களை முதலியார் பார்த்திருக்கிறார். கிணறு தோண்ட இடம் சரியாகக் குறிப்பிட வேண்டும். வேப்பங் கவையை



முதலியார் கையில் எடுத்து நடந்தால் நீரூற்றுள்ள இடத்தில் கவை நகரும், சுற்றும். முதலியாருக்கு பெருமுதலாளி தம் திறமையைப் பாராட்ட வேண்டும்என்பது அவா. நீரூற்றுள்ள இடத்திற்கு அனைவரும் போனார்கள். கவை சுற்றவில்லை. தரித்திரம் பலிக்கிறது. ஏற்கனவே இறைத்துக் கொண்டிருக்கும் கிணறுகளிடம் முதலியார் சென்றார். **கவை சுற்றவில்லை. முதலியாருக்குப் புரிந்தது. தன் திறமை அழிந்ததுஎனப் புரிந்தது. பீதி வந்தது. பிழைப்பே போயிற்று. ஆனால் பெருமுதலாளியின் தரித்திரம் தம் பிழைப்பை விழுங்கியதை முதலியார் அறியவில்லை.**
அதனால் பிழைக்கும் வழியே போய்விட்டது.
மீண்டும் மனம் முதலாளிமீது இருக்கிறது.
**அது தரித்திரம், பரம தரித்திரம், பரம்பரை தரித்திரம்.**
பரம்பரை தரித்திரத்தைமீறி ஒருவன் சம்பாதித்தான்.
அதன் காரணம் பணிவு.
திருட்டு புத்தியுள்ளவன்.
அவன் காணிக்கையைத் திருட வேண்டியதாயிற்று.
திருடனுக்கு அருள் செய்ய அவனது காணிக்கையைத் திருட வேண்டும்.
எல்லாப் பக்கங்களிலும் பெருஞ்செல்வம் காத்திருக்கும் பொழுது 'காசு வரமாட்டேன்' என்றால் அது தரித்திரத்தின் மீதுள்ள பிரேமை.

## ❑ ஒரு குழந்தையின் சுபாவம்

✲ சிறு குழந்தை, மனவலிமையுடையவன்.
அதன் சுபாவத்தை அதன் செய்கைகள்மூலம் விளக்க முயல்கிறேன்.

மனவலிமை, அடம் பிடிக்கும்.
பெரிய திருடு.
வேண்டாம்என்பதைத் தவறாது செய்வான்.

*ஆழ்ந்த பிரியம் தேவைப்படும் குழந்தைக்கு நடைமுறைப் பிரியம் எரிச்சல் தரும்.*

குழந்தை திருடு, பக்காத்திருடு, அடங்காப்பிடாரி.
அது தரித்திரம் வைரமானதுஎனப் பொருள்.
இக்குழந்தையை எவரும் மாற்ற முடியாது.
உற்பத்தி ஸ்தானம் மாற்றலாம்.

*தகப்பனார், தாயார் மாறினால் குழந்தையை மாற்றலாம்.*

அதற்குப் 'பணிவு' போதாது.
தம்மைக் காண்பவர் தீட்டுப்படும் அளவு சுபாவம் தீண்டாதவர்கள்என மனம் அறிய வேண்டும்.
தன்னைப் போன்றவரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்.
எதிரானவரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்.
எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும்.
அதைப் பெறமுயன்றால், உலகம் தன்னைப்போல் கிராக்கி செய்வதைக் காணலாம்.
அடக்கம், அமைதி, பணிவு, கீழ்ப்படிதல், தீண்டத் தகாதவர்கள் என்ற அறிவு ஏற்படாதவரை குழந்தை பேயாக இருப்பான்.
குழந்தை பெற்றோரின் பிரதிபலிப்பு.

**வறுமைக்கு அறிவு வருவது தரித்திரம்.**

தரித்திரம் தன் பெருமையை உணர்வது தரித்திரம் வலுப்படுவதாகும்.
இதையும் மீறி வரும் வசதி ஆற்றுவெள்ளம் கலங்கலாக இருப்பதைக் குடிநீராகக் கருதுவது.
அதிகாரம், அதிக காரம் - தரித்திரத்தின் முத்திரை.
அனைவரும் தன்னை அதிகாரம் செய்ய மனம் விழைய வேண்டும்.
தரித்திரம் சுபாவமாகி, ஜீவனாக முடிவாக தேவதையாகி-விட்டது.
சுபாவத்தை எரித்துச் சாம்பலாக்க வேண்டும்.



பொய் அதன் கருவி.
பொய் தரித்திரத்தை வலுப்படுத்தும்.
முழுமெய் பேசியும் போகாத தரித்திரம்.
இதன் அடையாளம் பகல் தூக்கம்.
பகலில் தூங்குவது பரம தரித்திரம்.
அதுவே இவரின் வரப்பிரசாதம்.

❑ **மடக்கிப் பேசினால் விஷயம் புரிந்து கொள்ள வழியில்லை.**

✲ **பண்புஎன்பது பிறர் பேசும்பொழுது பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பது.**

மடக்கிப் பேசுதல் (retort) மரியாதையில்லை.
பதிலில்லாதவன் மடக்கிப் பேசுவான்.
சிறுவர்களிடம் இது உண்டு. அதுவும் சரியில்லை.
மடக்கிப் பேசுதல் is defensive.

**தன்னைக் காப்பாற்றிக் கொள்வது.**

விஷயமிருந்தால் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை.
விஷயம்என எதுவுமில்லாதவர் மடக்கிப் பேசுவர்.
கேள்விக்குப் பதிலாகக் கேள்வி எழுப்புவது மடக்குதல்.
மடக்கிப் பேசுபவன் பிறர் தன்னை மடையன்எனப் புரிந்து கொள்வார்என அறிவதில்லை.
பேசுவது ஒரு கலை.
பெரியவர் பேசுவதை சிறுவர்கள் பதில் சொல்லாமல் கேட்பது மரியாதை.
மரியாதை பண்பால் வரும், பயத்தால் வரும்.
பயத்தால் வரும் மரியாதை பயம் போனவுடன் துடுக்காக எழும்.
துடுக்காகப் பேசுபவர் சிறுவயதில் பயந்து அடங்கியவராவர்.
மடக்கி ஏன் பேசுகிறார் என்பதைவிட மடக்கிப் பேசினால் எதிரி என்ன சொல்ல வருகிறார்என அறியும் வாய்ப்பு போய்விடும்.

எதிரியின் மனம் தெரியாவிட்டால் நம்கற்பனை பல திசைகளில் போகும்.

**உண்மை - உள்ளது - தெரியாவிட்டால் நாம் கற்பனை உலகில் வாழ்வோம்**.

என் நண்பன் மடக்கிப் பேசுவான்.
அவன் தகப்பனார் 40 காணி நிலம் படைத்த காங்கிரஸ் தலைவர்.
அவர் கூலிக்காரனாக இருந்து சொத்து சம்பாதித்தவர்.
அவர் முனிசிபல் கௌன்சிலுக்கு நின்றபொழுது ஓர் ஓட்டு கிடைத்தது.
மனைவி, மகன், மகள்கள் அவருக்கு ஓட்டுப் போடவில்லை.
தன் ஓட்டு மட்டும் விழுந்தது.
அவனுக்கு நண்பர்கள்என எவருமில்லை.
30 ஆண்டு ஹைகோர்ட்டில் கேஸில்லாமலிருந்தான்.
கடைசி காலத்தில் அதிகமாகச் சம்பாதித்தான்.
அவன் மடக்கிப் பேசுவதன் மூலம் தகப்பனார் கூலி வேலை செய்தது.
யாராவது, எதாவது சொல்லிவிடப் போகிறார்கள்என முந்திக் கொண்டு மடக்கி பிறர் வாயை அடக்குவது மடக்கிப் பேசுவது.
ஒருவர் எது கேட்டாலும் அவர் நண்பர் அவர் குறையைச் சுட்டிக்காட்டி மடக்குவார்.
இது பேசும் முறையில்லை.
இப்படிப் பேசுவது தரித்திரம் போகக் கூடாதுஎன முயல்வது.

- **புதியதாக அதிகாரத்திற்கு வந்தவருடைய குத்தலான ஆச்சரியம்.**
  **அது பலமானது.**

* எதிர்பாராதது ஆச்சரியம் தரும்.
பதவி வந்தால் ஆச்சரியம் எழும்.
புதியதாக எழும் மரியாதை ஆச்சரியமானது. புரிந்து



கொள்ளும் சக்தி, பிறர் மேலுள்ள பிரியத்தை அவருக்குப் புரியும்படி எடுத்துரைக்கும் திறன் ஆச்சரியம் தரும்.
குத்தலாகப் பேசுவது கிண்டல், கேலி, புதியதாகப் பணம் வந்ததுபோல் பேசுவது மனம் புண்படும்.
தமாஷ் செய்வது, அன்பாக, அழகாக, நல்லதாக இருக்கும்.
குத்தலான கேலி மனம் நோகும்படிச் செய்யும்,
அடுத்தவர் மனம் ஒடியும்.
''ஓ! எழுத ஆரம்பித்து விட்டீர்களா?'' என்று புதிய எழுத்தாளரைக் கேட்பது அவரை எழுதுவதையே மறக்கச் செய்யும்.
மட்டமான வெளிநாட்டார் அதுபோல் பேசுகிறார்கள்.
அப்படிப்பட்டவர் தன்னைமட்டும் பாராட்டுவார்.
எவருடைய திறமையையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.
குத்தல் மயிரிழை இருந்தாலும் நட்பு அழியும்.
அதுபோன்ற ஒருவரை நான் அறிவேன். அவர் கேலி விஷம், கெட்ட எண்ணமுடையது, உயிரை எடுக்கக் கூடியது.
முடிவாக தன்னையே அடியோடு அது அழிக்கும்என அவர் அறியார்.
**இப்படிப் பேசும் நேரம் ஒருவர் வாழ்வில் முக்கியமான கட்டம்**.
அது திடீரென எழும்.
ஓரிரு வினாடிக்குள் அவர் நல்லதாகப் பேசுவதா, கெட்டதாகப் பேசுவதாஎன தீர்மானம் செய்ய வேண்டும்.
**எப்பொழுதும் அன்னை நல்லபடியாக நடக்கும் வாய்ப்பைத் தருகிறார்**.
பிறரைப் பாராட்டும் சந்தர்ப்பம், தான் விரும்பும் பெண்ணை பாராட்டும் வாய்ப்பு, அது வாழ்க்கையை நிர்ணயிக்கும் நேரமாகும். அந்த நேரம் நல்ல பக்கம் திரும்பினால், அக உணர்வு உயர்ந்து வளரும்.
எலக்ஷன் வெற்றி, பிறர் பிரியமாகப் பேசுவது, அடுத்தவர் நம்மை நம்பி இரகஸ்யம் கூறுவது, கூட்டம் கைதட்டிப் பாராட்டுவது ஆகியவை அப்படிப்பட்ட நேரம்.
மனிதன் நல்லதை நோக்கி வளரும் சந்தர்ப்பம் அது.

அவை முக்கியமான நேரம்.
நல்லதைச் செய்தால் பெரிய நல்லது வரும்.
கெட்டதை விரும்பினால் பெரிய கெட்டது நடக்கும்.
அன்னை அப்படிப்பட்ட ஆயிரம் வாய்ப்பைத் தருகிறார்.
ஓர் ஆபத்தான நேரத்தில் அன்னையை அழைத்து சரி செய்யலாம். அந்த நேரம் கரண்ட் அடிக்கடி நின்றால் அன்னையைக் கூப்பிடுவது மிகச் சிரமம். கூப்பிட்டு வெற்றி பெறுவது பெரியது. அப்படி வெற்றி பெற்றால் கர்வம் எழும் - அத்துடன் மனிதன் அழிவான்.

விக்காம் போன்றவர் பெண்களுடன் தளுக்காகப் பேசி, குழைந்து, ''உன்னைப் போலுண்டா'' என்பான். பெண் அவ்வலையில் விழுந்து அழிவாள்.

வாழ்வு பெரியது.
அன்னை வாழ்வு அதைவிடப் பெரியது.
ஒரு தியானத்தில் பல ஜென்மப் புண்ணியம் பெறலாம்.
அதுவே அன்னை சக்திக்குரியது.
நாம் அதை இனிமையாக ஏற்க முடியுமா?
மனத்துள் விழிப்பு இருக்குமா?
அவ்விழிப்பு தியானத்தைவிடப் பெரியது.
மனம் விழிப்பாக இருந்து தீவிரமாக விரும்பும் எதையும் தவறாது பெறலாம்.

- **"நான் உன்னை அழிப்பேன்".**

* *''நீ அழிந்து தெருவில் நிற்பதைக் கண்டு நான் கை தட்டிச் சிரிப்பேன்'' என்பது வாழ்வில் வெற்றி பெற்று உயர்ந்தவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் சொல்லத் தவறாத சொல்.*

- பொறாமைப்படாத மனிதனில்லை.
- பொறாமைப்பட முடியாத மனிதனை கையெடுத்துக் கும்பிடலாம்.



- மனிதன் பொறாமைப்படுவான்என அறியாதவர் அழிக்கப்படுவார்.
- பொறாமைப்பட முடியாத மனிதனை பொறாமைப்பட்டு தங்களையே அவர்கள் அழித்துக்கொள்வார்கள்.
- அப்படிப்பட்டவர் அன்பரானால் அவரால் உலகில் பொறாமை வலுவிழக்கும்.

அன்னை சக்தியுடன் எக்காரணத்திற்காக மோதினாலும் இதுவே பலன்என நான் அறிய 1975-1980 ஆயிற்று.

எவர்க்கு எந்தக் குறையிருந்தாலும், எந்த தப்பும் நமக்குச் செய்ய நாம் கருவியாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும் என அறிந்தேன். அதன்பின் வலிய எனக்குத் தொந்தரவு தர முயன்றவரிடமிருந்து பெரும்பாடுபட்டு எரிச்சலில்லாமல் விலகினேன்.

இது பெரிய Power. சக்தி.
எந்த வழியும் போகவிடாது.
எவருடனும் தொடர்பு கூடாது.
எந்தத் தொடர்பையும் நாமே விலக்கக் கூடாது.
சிறிய நல்லதிற்கும் சிறிய கெட்டதிற்கும் பெரிய நல்லதும், பெரிய கெட்டதும் நடக்கும் என்கிறார் அன்னை.

இரண்டு வீடுள்ள என்னுடைய பேராசிரியர் எனக்கு வீடு விற்றவருக்குப் பால்ய நண்பர். வீட்டை விற்றவர் பத்திரம் எழுதித் தாராமல், வீட்டைத் தமக்குத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்கிறார். அவருக்கு வீடுண்டு.

''நீங்கள் வீட்டை நண்பருக்குக் கொடுத்தால் நான் சந்தோஷப்படுவேன்'' என்று என் பேராசிரியரே என்னிடம் நேராகக் கூறினார். அவருக்கு சமாதி புஷ்பம் அனுப்பினேன். வீட்டுக்காரர் என்மீது பொய்க் கேஸ் போட்டுத் தோற்றார். பேராசிரியர் தம் பெரிய வீட்டை தானமாக எழுதித் தரும் சந்தர்ப்பம் வந்து கொடுக்க நேரிட்டது.

நல்லதும் செய்ய முடியாது.
கெட்டதும் செய்ய முடியாது.
சமர்ப்பணம் செய்யலாம், வேறெதுவும் செய்ய நமக்கு உரிமையில்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஞானயோகத்திற்கு நிஷ்டை கருவியாவதுபோல், ஆன்மாவின் வளர்ச்சிக்கு ஆர்வம் கருவியாகிறது.

***ஆன்மாவின் வளர்ச்சிக்கு ஆர்வம் கருவியாகிறது.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பொறுக்க முடியாதவன் அவசரப்படுகிறான். பொறுமைக்கு சிருஷ்டியின் வேகமுண்டு. அதனால் அது க்ஷணம் தரிக்காது.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெரிய வாய்ப்பைத் தேடிப் போனால் சமூகத்தில் பெரு முன்னேற்றமடையலாம். அது அக வளர்ச்சிக்குப் பொருந்தாது.

***பெரிய வாய்ப்பும் அக வளர்ச்சிக்குதவாது.***





## P.113 Bring brief magnificent reminiscences

### உயர்ந்த நினைவுகளைச் சுருங்கக் கொண்டு வரும்

- ✡ விளக்கம் தரும் எண்ணத்தின் உயர்ந்த உன்னதம்
- ✡ அது ஞானசிருஷ்டியின் ஆனந்தமில்லை
- ✡ உள்ளது திரை, அதன்பின் உள்ளது ஒளிந்துள்ளது
- ✡ அழகின் சிறையில் அகப்பட்ட ஆனந்தம் அப்படி பாதுகாக்கப்பட்டது
- ✡ இறைவனை நோக்கி இதயகமலம் எழ மறந்தது

- ✡ நமக்குப் பின்னுள்ள நாணயமாக சூட்சும அழகு
- ✡ உருவமே உள்ளது, தெய்வமே அரசன்
- ✡ அழகிய எல்லைக்குள் எழும் அர்த்தமுள்ள ஜோதி
- ✡ களையான இயற்கை கரைந்தெழும் பிழையற்ற எழில்
- ✡ சுதந்திரம் அங்கு சிறப்பை உருவாக்கும்
- ✡ அற்புத சித்திரம் அசைவின் சக்தியைப் பெறவில்லை
- ✡ ஜனித்தது, ஆன்மாவின் பூரிப்பு அர்த்தமுள்ளதாயிற்று
- ✡ ஒருமையின் கவர்ச்சி அதிசயமென எழுந்தது
- ✡ கோடாக எழுந்த கோலான எழிற் கற்பனை
- ✡ நிறைவுதரும் முழுமையை உணர்ந்தவர் பலரும்
- ✡ பூரித்தெழுந்த முழுமையின் புதுமை அளவால் சிறந்தது
- ✡ குறுகிய சிறுமையில் குதித்தெழும் அற்புதம்

✡ சிறிய இடத்தில் சீறி எழும் பூரிப்பின் புரியாத சிக்கல்
✡ சூழலைத் தழுவும் சுருதியின் பாங்கு
✡ சட்டப்படி எழும் சிறப்பான வடிவம்
✡ பிழையற்ற அமைப்பு கவர்ச்சி நிறை பயன் தரும்
✡ சொந்த ஆனந்தம் தரும் சுகம்
✡ சிறப்பையறிந்து வாழும் சிந்தனையற்ற வாழ்வு
✡ சொர்க்கம் ஏற்கும் சொந்த நிறைவு
✡ உள்ளதே எல்லாம், தேவையென்பது எழ மறுக்கும்
✡ உடைந்த உள்ளம் உழலும் அவலமில்லை
✡ சோதனை ஒழிந்த போராட்டமற்ற பெருவாழ்வு
✡ எழும் வலியின்று, எதிர்ப்பிற்கு வழியின்றி
✡ பயமும் சோர்வும் அற்ற உலகம்
✡ குறையின் அருளில்லை, தோல்வியின் எழுச்சியில்லை
✡ தவறு செய்ய வழியில்லை, தடுக்கி விழும் தன்மையில்லை
✡ செறிவான சொந்த ஆனந்தம் வகுத்த வழி
✡ சொல்லிழந்த எண்ணம் கண்ட ரூபமெனும் வண்ணம்
✡ அலையென எழும் அற்புத எண்ணமும் செயலும்

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உணர்வின் உண்மையைக் காணும்பொழுது மனம் உடைகிறது. அவ்வெண்ணங்கள் சித்திக்க விழைவது மனம் உடையும் நிலையைப் போற்றுவதாகும்.

***உணர்வின் உண்மை மனத்தை உடைக்கும்.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

151. *ஆறாவது காதை எட்டினால் இரகஸ்யமில்லை.*

✶ **கூடிவரும் செயல் மனத்தில் படக்கூடாது.**

152. *இச்சையற்றவர்க்குச் சித்திக்கும்.*

✶ **ஆரம்பம் (initiative) அற்றவர்க்குச் சித்திக்கும்.**

153. *குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்.*

✶ **அன்னையும் அருளும் அனுதினமும் நினைப்பவர்க்கு.**

154. *பெண் சிரித்தால் போயிற்று; புகையிலை விரித்தால் போயிற்று.*

✶ **சம்பிரதாயம் பட்டால் சகலமும் போகும்.**

155. *பட்டால்தான் தெரியும் பாமரனுக்கு.*

✶ **அனுபவித்தவரே அருளை அறிவார்.**

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கெட்ட பழக்கத்தில் தன்னையழிக்க மனிதன் பிரியப்படுகிறான். ஏனெனில் இது கட்டுப்பாட்டுக்கு எதிரானது. கட்டுப்பாட்டுக்கு சக்தியும், தெம்பும் சேகரிக்கப்பட வேண்டும்.

***அழிவில் பெறும் ஆனந்தம்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**982) உதவி செய்யப் பெரும்பாடுபட்டாலும் பெறுபவர் சிறு குழந்தையாகச் சொல்லிய ஒரு சொல் அதிர்ஷ்டத்தையும் அன்னை அதிர்ஷ்டத்தையும் தடை செய்ய வல்லது.**

***அன்றைய சிறுசொல் இன்றைய பெரிய அதிர்ஷ்டத்திற்குத் தடை.***

நாம் பேசும்பொழுது பெரும்பாலும் யோசனை செய்து பேசுவதில்லை. எழுதும்பொழுதும் அப்படியே. நாம் பேசும்பொழுது ஒரு மாமா அங்கிருந்தால் அந்த இடத்திற்கு மாமாவின் இராசி வரும்என நாம் நினைப்பதில்லை. சாதாரணமாகப் பேசும்பொழுது முக்கியமான நினைவுகள் எழுந்தால் பேச்சு நினைவுக்குரிய சூடு பிடிக்கும். அந்த நேரம் நாம் சொல்லும் சொல்லுக்கு முக்கியத்துவம் வரும்என நாம் அறியோம். நேரம் எளிய பேச்சுக்கு இல்லாத அர்த்தம் தரும். நினைவுக்கே முக்கியத்துவம் எழுந்து பலிக்கும். கேலியான பேச்சில் சொல்பவை பலிக்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கும். நல்லெண்ணத்தால் சொல்வது பலிக்கும். வெறுங் கற்பனையானாலும் நல்ல எண்ணமானால் அதுவும் பலிக்கும். வெறுப்பால் குதர்க்கமாக நடக்க முடியாததைக் கூறினால் அதுவும் பலிக்கும். இவை நாமறியாதது, அறிந்தாலும் பொருட்படுத்தாதது.

- இளைஞர்கள் இரண்டு வருஷம் நெருங்கிப் பழகினார்கள். ஒருவர் கடிதம் எழுதும்பொழுது ''நாம் மிகவும் நெருங்கியிருக்கிறோம். இதுபோன்ற நெருங்கிய நட்பும் முறிந்து போவதுண்டு என நான் படிக்கிறேன். அப்படி நம் நட்பு முறிந்து போனால் அதற்கு வருத்தப்படக் கூடாது'' என்று எழுதினார். எப்படி இச்சொற்களை, சுடுசொற்களை உங்களால் எழுத முடிந்தது என அடுத்தவர் ஆத்திரப்பட்டார். ஓராண்டு கழித்து ஒருவரை ஒருவர் பார்க்க மனம் இடங்கொடுக்காத நிகழ்ச்சி நடந்து விட்டது. பிரிந்தனர்.



- புதியதாக flat வீடுகள் கட்டுகிறார்கள். நீங்கள் இங்கே வந்தால் அருகாமையாகும். வந்துவிடுங்கள்என்றவர் எதையும் நினைத்துச் சொல்லவில்லை. ஒரு சில ஆண்டுகட்குப்பின் அவர் புதிய வீடுகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்தார். கொஞ்ச நாள் கழித்து அதை விலைக்கு வாங்கிக் கொண்டார்.
- அடிக்கடி தம்பியைப் போய்ப் பார்ப்பவரை நோக்கி, ஏன் இப்படி போவதும் வருவதுமாக இருக்க வேண்டும். தம்பி வீட்டிற்கே போய் தங்கிவிடக்கூடாதாஎன்ற குரல் கொஞ்ச நாள் கழித்துப் பூரணமாகப் பலித்துவிட்டது.
- பட்டப்படிப்புக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர் மாணவனை எழுதச் சொன்னார். ஒரு நாள் எழுதியவர் மேற்கொண்டு எழுத மறுத்தார். இப்படி மறுத்தால் 3 முறை பரீட்சை எழுத வேண்டும்என்றார். அவர் மூன்றாம் முறை பாஸ் செய்தார்.
- சிறு தொழில், இரண்டு பார்ட்னர்கள். ஒரு லட்சம் வருஷ வியாபாரம், தொழில் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்ததில் ஓர் ஆண்டில் 10 லட்சமாயிற்று. பார்ட்னருக்குத் துரோகம் செய்து பழைய லட்சம் எட்ட முடியாமற் போயிற்று. மீண்டும் தொழில் நுணுக்கங்களை ஆழ்ந்து பயில முயன்றும் எந்தப் பலனுமில்லாமற் போனபொழுது தொழிலதிபரை முன்னேற்ற முயன்றவர் காரணங்களை அலசி ஆராய்ந்தார். அவர் சிறு பையனாக இருந்த சமயம் கேலியாகப் பேசியதைக் கேட்டுப் புண்பட்டு சாமர்த்தியமாக சிறுகுழந்தை சொல்லிய பதில் அனைவரையும் ஆச்சரியத்தில் அமிழ்த்தியது. அது இன்று அதிர்ஷ்டம்பெறத் தடையென விளங்கியது.
- ஒருவர் நல்லெண்ணத்தால் அதுபோல் பேசிய சொல், முனிசிபல் கௌன்சிலுக்கு 60 வயது வரை நின்றறியாதவரை அட்ஹாக் கமிட்டி வந்து கௌன்சிலராக்கியது.
- சொற்கள் பலம் வாய்ந்தவை. பலிக்காமல் போகாது.

○ ○ ○

## 983) நோக்கம் உள்ளவரை பலன் தரும். ஆழ்ந்த நோக்கம் வாழ்வு முழுவதையும் நிர்ணயிக்கும்.

*ஆழ்ந்த நோக்கம் வாழ்வு முழுவதையும் நிர்ணயிக்கும்.*

வாய்க்கால் நீரோட்டத்தைச் செலுத்துவதுபோல் நோக்கம் வாழ்வை நடத்தும். வாய்க்காலின்றி நீரோட்டம் குட்டையாகத் தங்கும். ஓடாது. சமூகத்தின் அடி மட்டத்திலுள்ளவர் அனைவருக்கும் நோக்கமில்லை. பிழைத்தால் போதும்என்பதே அவர் நிலை. மனிதனாக வாழ வேண்டும். நாலுபேர் மதிக்க வாழ வேண்டும் என்பவர் சம்பாதிப்பார்கள். அவர்கட்குத் திருமணமாகும். குடும்பம் நடத்தி மனைவி மக்கள் மரியாதைக்குரியவராவர். பிறந்தோம், வளர்ந்தோம்என்றால் வாழ்ந்ததாக முடியுமா? ஏதாவது சாதிக்க வேண்டாமா? கணிசமாகச் சம்பாதிக்க வேண்டும்என்பது என் நோக்கம்என்பவர் வெற்றிபெற வழியுண்டு. எனது தொழிலில் நான் சிறப்படைய வேண்டும்என முயன்று வெற்றி பெறுபவருண்டு. ஊரில் முக்கியஸ்தராக வேண்டும்என்று M.L.A., M.P. ஆனவருண்டு. தொழிலுடன் உறவு கொண்டு தொழிலுக்கு சிறப்பு கொண்டு வர வேண்டும்என்று முயல்பவருண்டு. என் தகப்பனார் சிறிய சொத்து வைத்துவிட்டுப் போனார். என் பிள்ளைகட்கு நான் பெரிய சொத்து வைக்க வேண்டும், நல்லவன்எனப் பெயர் வாங்க வேண்டும், நாணயஸ்தன்என விளங்க வேண்டும், அரசியல் தலைவனாக வேண்டும், குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும், மொழியில் புலமைபெற வேண்டும், வெளிநாடு போக வேண்டும், பெரிய பட்டம்பெற வேண்டும், பெரிய வேலைக்குப் போக வேண்டும், துறவறம்பூண வேண்டும், என் மக்கள் என்னைப் போல் வரவேண்டும் என நினைக்க வேண்டும், பத்திரிகை நடத்த வேண்டும், புத்தகம் எழுத வேண்டும்என்பது பல நோக்கங்கள்.

- நோக்கமே இல்லாதவனுக்குச் சாதனையில்லை.
- நோக்கம் திறமையால் பூர்த்தியாகும்.
- நோக்கம் ஆதாயமாக, சிறியதாக இருப்பதுண்டு.



- திறமை நோக்கத்தைப் பூர்த்தி செய்தால் சொத்து சேரும்.
- திறமையும் பண்புமிருந்தால், நாணயம், பிரபலம் வரும்.
- பொது வாழ்வில் நோக்கமிருப்பது அரிது.
- பொது வாழ்வில் இலட்சியம் பூர்த்தியாவது அரிது.
- துறவறம் பெரிய நோக்கம். அது காட்டில் பூர்த்தியாவது.
- நோக்கமே மனிதன்.
- ***ஆழ்ந்த நோக்கம் வாழ்வனைத்தையும் நிர்ணயிக்கும்.***
- ஒரு சிலர் இலட்சிய நோக்கம் பூர்த்தியாவதால் உலகம் இயங்குகிறது.
- நோக்கம் வாழ்வைச் சீர் செய்து சாதனைபெற வழி செய்யும்.
- கடன் படக்கூடாது. கெட்டபெயர் வரக்கூடாதுஎன்பவை சிறு நோக்கங்கள்.
- ஊருக்கு உழைக்க வேண்டும், நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும்என்பவை பெருநோக்கங்கள்.
- இந்தியர் பிறப்பிலேயே இலட்சியவாதிகள்.
- ஆண்டவனுக்கும், தர்மத்திற்கும், மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்டு வாழ்பவர்கள்.
- ***அன்பருக்கு உகந்த நோக்கம் அன்னை நினைவில் அனைத்தும் லயிக்க வேண்டும் என்பது.***

❍ ❍ ❍

## 984) செயலின் புறம் காலத்தால் அழியும். அதன் சூட்சுமப் பலன் அழியாது. எண்ணம், நோக்கம் அழிவதைப்போல் செயலை எளிதில் அழிக்க முடியாது.

*எண்ணம், நோக்கம் அழிவதைப்போல் செயலை எளிதில் அழிக்க முடியாது.*

எண்ணமும், உணர்ச்சியும் சேர்ந்தது நோக்கம். எண்ணம்

அழியாது. அது அழிந்தாலும் நோக்கம் அழிவது சிரமம். செயல் முழுமையானது. செயல் நெடுநாள்வரை அழியாது. பல ஜென்மங்களாகும் செயல் அழிய. போன ஜென்மத்தில் முதலாளியை ஏமாற்றியவர் இந்த ஜென்மத்தில் யாரையும் ஏமாற்றாதபொழுது ஏமாற்றியதாகப் பொய்க் கேசில் மாட்டி அவதிப்படுகிறார். பாட்டனார் கடன் வாங்கினார், திருப்பி தரவில்லை. பேரன் கடன் வாங்கினார். 30 வருஷமாகப் பெரிய அளவு வட்டி கட்டி வருகிறார். திருப்பித் தர பெரிய சம்பளம் பெற்றும் 30 ஆண்டாக முடியவில்லை.

*பாட்டனார் செய்தது அழியவில்லை.*

கிடைக்காத அட்மிஷனை முகம் தெரியாத பையன் கேட்கிறான். அன்பர் கேட்டார் கிடைத்தது. இரண்டாண்டு கழித்து அன்பருக்கு டிரெயினிங்கில் அட்மிஷன் வேண்டும். போட்டி அதிகம். செல்வாக்குள்ளவர் உடனிருக்கிறார். வாங்கிக் கொடுக்க முன் வரவில்லை. அன்பர் கேட்கவில்லை. அவருடனிருந்த முகம் தெரியாத பிரின்சிபால் முன்வந்து அந்த அட்மிஷனை வாங்கிக் கொடுத்தார்.

*முகம் தெரியாத பையனுக்குப் பெற்றுக் கொடுத்த செயல்*
*முகம் தெரியாதவர்மூலம் திரும்ப வருகிறது.*
*செயல் அழியாது.*

எண்ணம் தரமானது. எளிதில் அழியாது. உணர்ச்சி அதிக வலுவானது. எண்ணமும், உணர்ச்சியும் சேர்ந்தது நோக்கம் (attitude) என்பதால் கரையாது. இவை அனைத்தும் அகத்திற்குரியவை. அகம் புறமாகி செயலாகிறது. செயல் ஜட உலகின் நிகழ்ச்சி. அழிய பல ஜென்மங்களாகும். திருவுருமாற்றம் அழிக்கும். காலம் அழிக்கும். அதற்கு நெடுநாளாகும். வெறுப்பான காட்சி மனதில் பதிந்துவிட்டால் எளிதில் மறக்க முடியாது. மறக்க முயன்றால், அதிகமாக நினைவு வரும்.

காலின்ஸை ஷார்லோட் மணக்க முடிவு செய்ததை எலிசபெத்திடம் கூறியபொழுது ''நடக்காது'' என்றாள். பல மாதம் கழித்து லேடி காதரீனுடன் பேசும்பொழுது டார்சியை மணம் புரிவதைப் பற்றிப் பேசும்பொழுது காதரீன் ''நடக்காது'' என்றாள். முடிவாக



டார்சி மணக்க விரும்பியதை ஜேனிடம் கூறியபொழுது ''நடக்காது'' என்றாள்.

- ✩ **சொல்லுக்கு உயிர் உண்டு.**
- ✩ **மீண்டும்மீண்டும் வரும், வந்தபடியிருக்கும்.**

தம்பிக்கு மறுமணம் செய்ய தமக்கை முயன்றாள். அனைவரும் அவளைக் கண்டித்தனர். அவள் வாயை மூடிக் கொண்டாள். அவள் பெண் திருமணம் வந்தது. அதே கோளாறு வந்து தீர்ந்தது. பெண் ஆறாவது பிரசவத்திற்குத் தாய் வீட்டிற்கு வந்தாள். கணவனுக்கு ப்ரமோஷன் வந்தது. மறுமணம் செய்து கொள்வதற்காகப் பெண் பார்க்கப் புறப்பட்டார். தாயார் செய்த செயல் பெண் வாழ்வில் தொடர்கிறது.

*செயல் எளிதில் அழியாது.*

❍ ❍ ❍

**985) உயர்ந்த அறிவு வந்தால் எண்ணம் மாறிக் கொள்ளும் (reverse). உணர்வு உயர்ந்து தன் நோக்கத்திற்கெதிரான உயர்ந்ததைக் கண்டால் தலைகீழாக மாறும். காலம் கனிந்து செயலை அதுபோல் மாற்றவல்லது உடல். தனக்கேயுரிய வாழ்வாக ஆழ்ந்து உயர்ந்த தீவிரமான பரந்த நிலையைக் கண்ணுற்றால் தன் செயலை தலைகீழாக மாற்றும்.**

*காலம் கனிந்து செயலை மாற்றும்.*

இளமைக்கு வேகமுண்டு. வேகத்தில் அறிவு விலகும். அறியாமை வேகம் பெறும். வேகம் விறுவிறுப்பு பெற்று இலட்சியமாக எழும். பலர் சேருவார்கள். ஒரு கட்சியாகவும், மதமாகவும் மாறுவதுண்டு. இளமை கடந்து வயது வந்தால் நேற்று பேசியது இன்று உண்மையில்லையெனத் தெரியும். வெட்கம் வருவதுண்டு. அதுவே முடிவாகத் தெரியும். இளமையின் வேகத்தில் பேசுவது முடிவன்றுஎன மீண்டும் வேகம் எழும். அரசன் அந்தப்புரம்

வைத்திருக்கிறான். பணக்காரன் 10 பெண்களை சேர்த்து சிறு அந்தப்புரம் கொண்டாடுகிறான். புதிய பணம் வந்ததும் 4 மனைவி உடன் வருகிறது. குடிக்கிறான். குடிப்பதின் பெருமையைப் போற்றுகிறான். குடிப்பது தவறுஎனப் பேசினால் இல்லாதவன் பேசுவான்எனக் கூறுவான். தொழிலாளி பங்காளனாய் வாழ்க்கையை ஆரம்பித்துத் தொழிற்சங்கத் தலைவனாகி முதலாளிகளே அழிய வேண்டும்எனப் பேசியவனுக்கு தொழிற்சங்கம் மனித சுபாவத்தின் ஆழ்ந்த உண்மைகளைக் கூறுகிறது. தொழிலாளிகள் தலைவர்கள், முதலாளி செய்யும் அத்தனை அட்டூழியத்தையும் செய்யக்கூடியவர் எனச் சந்தர்ப்பம் தெரிவிக்கிறது. மனம் உடைந்து வெளியே போய் சொந்தத் தொழிலாரம்பித்து முதலாளியானபின் மனிதன் யார்என அறிந்து மனம் மாறி புதிய உணர்வு எழுகிறது. கெடுபிடியில்லாமல் நிர்வாகமில்லை. தொழிலில்லாமல் நாடில்லை. நியாயம்என எழுந்தால் முதலாளி, தொழிலாளி எவரும் தேற மாட்டார்கள். முடிந்ததை செய்வார்கள். முடிந்தால் கொடுமை செய்வான். முடியாவிட்டால் நியாயம் பேசுவான். முதலாளி தவறு, தொழிலாளி தவறு என்பதில்லை. தவறு எவரும் செய்யக் கூடியது. தவறு செய்யும் சந்தர்ப்பம் வந்தால் செய்யாமலிருக்க மனிதத்தன்மை வேண்டும். அங்கு மாமியார், மருமகளில்லை. மனிதத்தன்மை, நியாயம், தெய்வ பக்தி, மனசாட்சி எழும். அதில் தேறுபவர்கள் குறைவு. வருஷக்கணக்காக ஊழலை எதிர்த்துப் பேசியவன் MLA ஆனவுடன் எப்படி பணம் வாங்காமலிருக்க முடியும்என்ற 'உண்மை'யை ஆழ்ந்து உணர்கிறான். இந்தி சைனி பாயி பாயிஎன்ற நேரு 1962இல் சைனா படையெடுத்த பொழுது சைனாவையும், பஞ்சசீலத்தையும் மறந்து, அமெரிக்காவை உதவி கேட்டார். வலிமையற்றவன் பேசும் அரசியல் வேறு. வலிமையுள்ளவன் செய்வது வேறு. வலிமையற்றவன் வலிமையுள்ளவன் என்ன செய்ய வேண்டும்எனக் கூறுவது இளமையின் வேகம். ***அறியாமையின் அனுபவமற்ற ஞானம்***. மாமியார் கொடுமையை அனுபவித்தவள் மாமியாரானபின் தான் செய்யும் கொடுமை சரியென உணர்கிறாள். தான் பட்டதை மறந்துவிடுகிறாள். மருமகளாகக் கொடுமை அனுபவித்தவர் மாமியாராகியும் மருமகளிடம் கொடுமையை அனுபவிக்கும்பொழுது எதற்கும் இராசி வேண்டாமா எனக் கூறுகிறாள். சிஷ்யனுக்கு குரு பாரபட்சமானாலும் ஏற்றுக்



கொள்கிறான். ஆனால் மனம் சம்மதிக்கவில்லை. தான் குரு ஆனபொழுது பாரபட்சமில்லாமல் நடப்பது முடியாதுஎனவும், பாரபட்சம் அவசியம்எனவும், சுபாவத்தை மீற முடியாதுஎனவும், பாரபட்ச-மில்லாமல் நடந்து அதனால் அவதிப்பட்டும், அனுபவம் பல என அறிந்து ஞானம் பெறாமல் போய்விடுகிறான்.

சூரியன் உலகைச் சுற்றி வருகிறதுஎன்ற மனிதன் விஞ்ஞானம் பூமி சூரியனைச் சுற்றி வருகிறதுஎன்று கூறுவதை ஏற்கிறான். உரம் போட்டால் நிலம் கெட்டுவிடும்என்ற விவசாயி, உரம் போடாமல் பயிராகாதுஎன மாறிக் கொள்கிறான். படிப்பை அலட்சியம் செய்த கிராமத்து மனிதர், படிப்பில்லாமல் எதுவுமில்லைஎன்று உணர்கின்றனர்.

- ✩ ***அறிவு வளர்ந்து தலைகீழே மாறும்.***
- ✩ ***உணர்வு உயர்ந்து நேர் எதிராக மாறும்.***
- ✩ ***செயலும் அதுபோல் மாறும்.***

காலில் செருப்புப் போட்டுக்கொண்டு ஊர் வழியாகப் போனவனை மரத்தில் கட்டி வைத்துக் கொளுத்திய காலம் ஒன்று. அவன் மகன் MLA ஆகி, மந்திரியானபொழுது அவனை நடுவீட்டில் உட்கார வைத்து விருந்து நடத்திப் பெருமைப்படுவது காலம் மாறியதைக் காட்டும்.

- ✩ ***காலம் மாறும், மனம் மாறும்.***
- ✩ ***நியாயம் மாறாது.***
- ✩ ***எந்தக் காலத்திலும் நியாயத்தை அறியும் திறன் மனிதனுக்கு உண்டு.***

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**நம்பிக்கை நாலு காரியம் செய்யும்.**

**பகவான் ஸ்ரீ அரவிந்தர் பூமியின் சார்பாக இறைவனிடம் கேட்ட வரம் பெரியது. சித்திப்பது கடினம். சத்தியம் ஜடத்துள் சித்திக்கும் வரம் அது. அதைப் பேரருள்மட்டுமே சாதிக்க வல்லது.**

**சக்தி ஜடத்தின் ஜீவியத்துள் வந்து அதன்பின் நிற்கிறது. இருண்ட திரை மறைவில் சக்தியுள்ளது. பேரருளின் நிபந்தனை பூர்த்தியானால் அது பலிக்கும். பூரணச் சரணாகதி, தெய்வத்திருவுள்ளத்தைமட்டும் ஏற்கும் பாங்கு, பொய்யை மறுத்து சத்தியத்தை முழுமையாக அறிந்து தேடும் மனநிலை அந்நிபந்தனைகள். இவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஜடம்வரை அது ஊடுருவ வேண்டும்.**

***– Sri Aurobindo***
***Volume-IV, page 55***

✡ வரம் மனிதன் தெய்வத்தைக் கேட்பான். வாழ்க்கைப் பலனை வரமாகக் கேட்பது மனிதன் பழக்கம். தவமிருப்பவர்கள் ஆன்மீகப் பரிசுகளான மோட்சம், இறைவன் தரிசனம், மௌனம், ஆனந்தம் போன்றவற்றைக் கேட்பார்கள். சாகாவரம் 'நித்தியத்துவம்' கேட்பதுண்டு.

✡ புத்தர், விவேகானந்தர் போன்றவர் உலக மாந்தர் அனைவரும் மோட்சம்பெற விழைந்தனர். அது இறைவனை, பிரம்மத்தைக் கேட்கும் வரம்.

✡ *பகவான் ஸ்ரீ அரவிந்தர் கேட்டது பூமாதேவிக்காகக் கேட்ட வரம்.* பூமாதேவி பிருத்வி, ஜடம் 5 முறை மாறியதில் முடிவான மாற்றம். அதையும் கடந்து ஜடத்தின் ஜீவியமும், ஜடமும் உள்ளன. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து ஏற்பட்ட மனம், இருளை உற்பத்தி செய்ய வேண்டி, ஒளியையும், முழுமையையும் மறந்து, இருளின் கருவிகளான மனம், வாழ்வு, ஜடத்துடன் இணைந்து ஐக்கியம் பெற்றது. அவை திருவுருமாறி மனம் சத்தியஜீவியமாகி, வாழ்வு ஜீவியமாகி, ஜடம் சத்தாவது திருவுருமாற்றம். அது நடைபெற 30,000 ஆண்டுகளாகும்.

***அந்த சித்தியை பூமிக்குப் பகவான் வரமாக முழுப் பிரம்மத்தைக் கேட்டார்.***

✡ அந்த வரம் சித்திக்கும் சக்தி சத்தியஜீவியம்.

✡ அது தன்னிலையினின்று இழிந்து வந்து ஜடத்தின் பின் திரை மறைவில் உள்ளது.

✡ இது மனிதனால் சித்திக்க வேண்டியது.

✡ மனிதன் மேலிருந்து வந்த சத்தியத்துடன் பொய் கலந்திருப்பதை உணர்ந்து பொய்யை விலக்கி சத்தியத்தைப் பூரணமாக ஏற்பது நிபந்தனை.

✡ மனிதன் பொய்யை விலக்கினால், பொய்யும், இருளும் வலுவிழந்து விடும்.
மனிதன்மூலம் வாழ்வும், வாழ்வுமூலம் ஜடமும் ஒளி பெறும்.

✡ மேலிருந்து இறங்கி வரும் ஒளி 4 நிலைகளிலுள்ள மனம் வழியாக வருவதால், அந்நிலைகட்குரிய பொய் கலந்திருக்கும்.

***பொய்க்கலப்பை விலக்க மனிதனால் முடியாது. ஏனெனில் மனிதனுக்குப் பொய் ருசிக்கும்.***

✡ ஆயிரம் ஆண்டுகளில் நடப்பது ½ க்ஷணத்தில் நடக்கும் நேரம் சிருஷ்டிக்கு வந்துள்ளது. அதைப் பலிக்க வைப்பது மனிதன் கடமை.

❀ ❀ ❀

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### (36) பலனைச் சிந்திக்க முடியாத மனம்*

நம் வாழ்வில் பெரும்பலன் வந்த நேரங்களை நினைத்துப் பார்த்தால் அப்பொழுது நமக்கு முடிவு என்ன, பலன் எப்படியிருக்கும் என்ற நினைவேயிருந்திருக்காது. நரசிம்ம ராவ் பிரதமரானது, சாஸ்திரி பிரதமரானது, அண்ணாதுரை முதன் மந்திரியானது, காமராஜ் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தலைவரானது, காந்தி *மகாத்மா காந்தியாகி இந்தியாவை ஆண்டது*, சர்ச்சில் பிரதமரானது போன்ற உதாரணங்கள் அதை விளக்கும். ''நான் நூறாண்டு வாழ்வேனா, வாழ்ந்தால் உலகம் எப்படி மாறும்?'' என அன்னை பகவானை சூட்சும உலகில் கேட்டபொழுது ''அவை உனக்குத் தேவையில்லை'' என பகவான் கூறினார்.

- நம்மை மறந்து கடமையைச் செய்யும்பொழுது எதிர்பாராத பெரும்பலன் வருவதை நாம் கண்டிருக்கிறோம்.
- *நம் திறமைக்குப் பெரும்பலன் உண்டுஎன்று தெளிவாகத் தெரிந்தபின் அதை நினைக்காமல் வேலை செய்வது உலகிலில்லை.*
  கிளின்டன் சிறுவயதிலிருந்தே ஜனாதிபதியாக வேண்டும் என்று கண்ட கனவு பலித்ததும், சந்திரசேகர் பிரதமராக உயிரை விட்டது பலித்ததும் எதிரான உண்மைகள்.
- பகவான் யோகம் செய்யக் கருதவில்லை. சுதந்திரம் பெற யோகம் செய்து சுதந்திரம் வந்தவுடன் இறைவன் அவரை யோகம் செய்யச் சொன்னார்.
- வாழ்வில் ஒரே குறியாக இருந்து பலிப்பது தவறான முறையால் பெற்ற பலனாக இருக்கின்றன. அல்லது மிகச் சிறியவன் மிகப் பெரியதை நாடி பலித்ததாக இருக்கும்.

***தெரியாமல் பெறும் பலன் (unconscious) கண்மூடிப் பெறுவது, தெரிந்து பெறுவது (conscious) உலகிலில்லை. அப்படிப் பெறுவது யோகம் பலிப்பதாகும்.***

- நாம் செய்யும் எந்தப் பெரிய காரியமும் - நாடு சுபிட்சமாக வேண்டும், தண்ணீர் பஞ்சம் விலக வேண்டும், இலஞ்சம் அழிய வேண்டும், போதை மருந்து சாப்பிடுபவன் மாற வேண்டும், உலகம் அன்னை பகவானை ஏற்க வேண்டும், இந்தியா பாகிஸ்தான் இணைய வேண்டும் - இரு வழிகளில் சாதிக்கலாம். ஒரே குறியாக இருந்து சாதிப்பது வாழ்வின் வெற்றி. அது அரிது. நம் இலட்சியத்திற்குரிய வேலைகளை தவறாமல், சிறப்பாகப் பலனை நினைக்காமல், பலனை நினைக்கவே முடியாமல் செய்தால் அது பலிக்கும்.

***அப்படிப் பலிப்பவருக்கு யோகம் பலிக்கும்.***

- அது பலிப்பது சிரமம்.

  சரணாகதியின் முக்கியத்துவம் தெரிந்து மனம் அதில் இலயித்தால் நாம் நம்மை - நம் அகந்தையை - மறந்து காரியத்தில் ஈடுபடுவோம்.
  - முயல்பவர்க்கு முடியாததெல்லாம் முடியும்.
  - இயல்பாக அச்சுபாவமுள்ளவர்க்கு தற்சமயம் அதுபோன்ற பலன் வந்தபடியிருக்கும். அவர் தனக்கு யோகம் செய்யும் தகுதியுண்டுஎன அறியலாம்.
- இம்முறைப்படி பகவான் பூரண யோகத்தை வந்தடைந்தார். அதனால் அன்பர்கட்கு அது உரிய முறை.

*தொடரும்.....*

❀ ❀ ❀

* Inability to think of the ensuing result.

# அன்னையின் கைக்குட்டை

இல. சுந்தரி

எஜமானியம்மாள் வீட்டிற்கு அவர்கள் உறவினர் வெளியூரிலிருந்து வந்திருந்தனர். எஜமானியம்மாவின் அண்ணனும் அவர் சம்சாரமும் அவர்கள். எஜமானியம்மாள் தம் அண்ணியாருடன் உரையாடுவது வீட்டு வேலைகளில் உதவி செய்யும் வாணியின் காதிலும் விழுகிறது.

''அண்ணி, இப்போதெல்லாம் அண்ணன் நன்றாக இருக்கிறாரா? பிரச்சனை ஒன்றுமில்லையே?''

''பிரச்சினையா? இல்லை தேன்மொழி. பிரச்சினைகளெல்லாம் அதீத வாய்ப்புகளாக மாறிவிட்டன. இந்தப் பிரச்சினைமட்டும் வந்திராவிட்டால் 'அன்னை' என்ற அற்புதத்தை இழந்திருப்போம்''.

''என்ன சொல்கிறீர்கள் அண்ணி? நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பிரச்சினையைப் போற்றுவது போலல்லவா இருக்கிறது?''

''ஒரு வகையில் அதுவும் உண்மைதான். ஆபத்து என்பது ஆண்டவன் உலகைத் திருப்பி வைக்கும் நேரமாம். நமக்கு மனம் பதறுவது உண்மைதான். பெரிய நல்லதுடன் வரும் தவறான செய்தியும், கெட்டதுடன் வரும் நல்லதும் வாழ்வின் ஆன்மீக உண்மையைக் காட்டுவனஎன்று ஒரு சான்றோர் எழுத்தில் படித்திருக்கிறேன். சென்ற ஆண்டு எங்கள் நிலை, வாழ்வா சாவா என்றிருந்தது என்னவோ உண்மைதான். அப்போது, இந்த மகிழ்ச்சியான நிலைக்கு மாறுவோம்என்றோ, நன்றிப் பெருக்குடன் இங்கு வருவோமென்றோ கற்பனைகூட செய்திருக்க முடியாது''.

''இங்கு நன்றிப் பெருக்குடன் வந்தோம்என்கிறீர்களே, எனக்கு வெட்கமாக இருக்கிறது. அண்ணன் உயிருக்கும், மானத்திற்கும் போராடிய அந்த நிலையில்கூட ஒருதவியும் செய்ய இயலாமலிருந்தேனே. உங்களுக்காக நான் எதுவுமே செய்யவில்லையே அண்ணி''.

''நீ மட்டுமல்ல. யாருமே அந்நிலைக்காளான உன் அண்ணனுக்கு உதவி செய்ய முடியாமல்தானிருந்தனர். நான் 'இங்கு' என்றது இந்த வீட்டையல்ல இந்தப் பாண்டிச்சேரியை''.



''அப்படி இங்கு நன்றி செலுத்தும்படி என்ன அற்புதம் இருக்கிறது?''

''அதுதான் வேடிக்கை. உனக்கு மட்டுமன்று. இவ்வூரிலுள்ள பலருக்கும் அது தெரியாது''.

''பலருக்குத் தெரியாத அற்புதமாக இவ்வூரில் என்ன அண்ணி இருக்கிறது?''

(வாணிக்கு உரையாடலில் ஈடுபாடு வந்தது).

''ஒரு நிறுவனம்என்று சொல்லலாம். ஒரு சக்திஎன்று சொல்லலாம். ஒரு ஜீவியம்என்று சொல்லலாம். ஒரு சூழல்என்றும் சொல்லலாம். ஆனால் தெய்வம்என்றால்தான் எல்லோர்க்கும் புரிகிறது''.

''ஓ! இங்கே ஒரு சிவன் கோவிலிருக்கிறதே அதைச் சொல்கிறீர்களா? நான் எப்போதாவது விசேஷ நாட்களில்மட்டும் விரதமிருந்து, விளக்கேற்றப் போவேன். ஆனால் இவ்வூரில் உள்ளவர்கள், இதைவிட காசியிலும், கைலாயத்திலும்தான் சக்தி அதிகம் என்பார்கள்''.

''இதுவும் ஒரு வேடிக்கைதான். ஜெராக்ஸ் வந்த பிறகும், கார்பன் காப்பி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீ சொல்லும் முறை சமயங்களை ஒட்டி எழுந்த வழிபாட்டு முறை. கடந்த காலத்திற்குரியன. ஆனால் எதிர்காலத்திற்குரிய ஆன்மீக வழியைக் காட்டியவர் இங்கே சூட்சும வடிவில் உறைகிறார்''.

''அப்படியென்றால் சிவன், விஷ்ணுவெல்லாம் பெரிய தெய்வங்களில்லையா?''

''ஆரம்பத்தில் உன்னைப் போலத்தான் எனக்கும் சந்தேகம் வந்தது. பகவான் ஸ்ரீ அரவிந்தரது நூல்களைப் பயின்ற ஓரன்பர், உன் அண்ணனின் நண்பர் மூலமாகத்தான் சில விஷயங்களை அறிந்தேன். இதுவரை பூமியை ஆண்ட சக்திகள் மேல்மனச் சக்திகள். இனி அதிமனத்தின் ஆட்சி வரும் என்று ஸ்ரீ அரவிந்தர் கூறியிருக்கிறாராம்''.

''இதெல்லாம் எனக்குப் புரியவில்லை. எனக்குப் புரியம்படி எந்த சாமி பெரியது, எதைக் கும்பிட வேண்டும்என்று மட்டும் சொல்லுங்கள்''.

''அன்னை கூறியது சரிதான்'' (என்று கூறிச் சிரித்தாள் அண்ணி).

''என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் வேறு ஏதோ சொல்கிறீர்களே அண்ணி''.

''அதாவது சிவன், விஷ்ணு என்றெல்லாம் சொல்வோமே, அவர்கள் தெய்வ லோகத்தைச் சேர்ந்த கடவுளர்கள். மனிதர்களுடன் ஒப்பிடும் போது இந்தத் தெய்வங்கள் மகாசக்தி வாய்ந்தவை. எனவே, அவற்றுடன் தொடர்பு கொள்ளும் போது மனிதர்கள் தடுமாறிப் போகின்றார்களாம். இன்னும் பிராணலோகத்தைச் சேர்ந்த ஜீவர்கள்கூட மாறு வேடத்தில் கோயில்களில் தோன்றி மனிதர்களை ஏமாற்றிவிடுகின்றனராம்''.

''எனக்கு இதெல்லாம் விளங்கவில்லை. நீங்கள் அன்னை என்ற அற்புத சக்தி என்றீர்கள். இவற்றை தெய்வலோகக் கடவுளர் என்றீர்கள். என்னைப் பொறுத்தவரை எது பெரியது? எதை ஏற்க வேண்டும் என்பதுதான் முக்கியம்''.

(வாணிக்கும் இதே கேள்விதான் மனதில். இதற்கென்ன பதில் சொல்வார்கள்என்று ஆவலுடன் கவனித்தாள்).

''உனக்குப் புரியும்படி சொல்ல முயற்சிக்கிறேன். நெய்வேலி அனல் மின்நிலையம் இருக்கிறதல்லவா, அதன் வேலை மின்னுற்பத்திதான். பக்கத்து கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை அதற்கு இல்லை. வேண்டுமென்றால் செய்ய முடியும். கிராமவாசிகள் வேண்டிக் கேட்டுக்கொண்டால் ஒரு பள்ளிக்கூடமோ, ஒரு மருத்துவமனையோ கட்டித் தருகிறது. அது அவர்கள் கடமையில்லை. சுற்றியுள்ளவர்கள் கேட்டுக் கொண்டதால் செய்துகொடுத்தார்கள். அவ்வளவுதான். அதுபோல சிவனும், விஷ்ணுவும், முருகனும் தெய்வ லோகத்தைச் சேர்ந்த கடவுளர்கள். இவர்கள் அவரவர் இருப்பிடத்திலேயே இருப்பவர்கள். உலகில் வாழும் மனிதர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லை. மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமையில்லை. மனிதனின் பிரார்த்தனை அவர்களை எட்டினால் அருள் செய்கிறார்கள். இத்தனை கடவுளர்களும் மேல்மனத்தினர். மனத்தின் வகையைச் சேர்ந்தவர். அவர்கள் அளவு பூமியளவு. சக்தியும் பெரியது. என்றாலும்



இவர்களுக்கு மனித குணம் ஓரளவுண்டு. கோபம், போட்டி போன்றவையும் உண்டு. நான் சொல்லும் சக்திக்குப் போட்டி, பொறாமை விலக்கு. இது நாம் அழைக்காதபோதும் நம்மை நாடி வரும் தெய்வம். பரம்பொருள் சிருஷ்டியில் தன்னை இழந்து, இழந்ததை மறந்தபோது அதை நினைவூட்ட அவதரித்து வந்த சக்தியிது''.

''இவ்வளவு பெரிய விஷயமெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது? கடவுள் என்றால் நாமனைவருமே சிவன், விஷ்ணு, முருகன் என்றுதானே இத்தனை நாள் எண்ணியிருந்தோம். 'அன்னை' என்றும், 'அற்புத சக்தி' என்றும் புதிது புதிதாய்ச் சொல்கிறீர்கள். அதுவும் இந்தவூரிலேயே உள்ளதாய்ச் சொல்கிறீர்கள். இதையெல்லாம் உங்களுக்கு யார் கூறினார்?''

''உங்கள் அண்ணனுக்கு வந்த பிரச்சினைதான் அன்னையை எங்களுக்கு அறிமுகப்படுத்தியது''.

''விபரமாய்ச் சொல்லுங்கள் அண்ணி''.

''அண்ணனுக்கு ஏன் பிரச்சினை வந்தது? அவர் செல்வமும், செல்வாக்கும் எப்படிப் பொருளற்றுப் போயின? உயிர்ப் பிரச்சினை, மானப் பிரச்சினை என்றெல்லாம் சொன்னீர்கள், விளக்கம் சொல்ல மறுத்துவிட்டீர்கள். என் கணவரும் பிடிவாதமாய் என்னைத் தடுத்துவிட்டார். மேலும், தவறாகவும் பேசினார். அந்த நிலைமைகள் மாறி நீங்களும் அண்ணனும் இங்கு வந்திருப்பதும், என் கணவர் அண்ணனுடன் சுமுகமாய் வெளியே சென்றிருப்பதும் வியப்பாயும், மகிழ்வாயும் இருக்கிறது''.

''எல்லாமே அன்னையின் அருள்தான் தேன்மொழி. வாழ்வில் விழுந்தவர் எழுவதில்லை. அன்னை வாழ்வில் நஷ்டமும், தோல்வியும் நம்மவர்க்கில்லை என்பதுதான் புதுமொழி. நான் உன்னை நேரில் பார்க்கும்போது எல்லாவற்றையும் விளக்கமாய்ச் சொல்லலாம் என்றிருந்தேன். உன் அண்ணன் பெரிய தொழிலதிபராய் இருந்தது உண்மை. அவருக்கு அரசியல் செல்வாக்கிருந்ததும் உண்மை. ஆனால் அவர் நேர்மையான வழியில் செல்வந்தராக ஆகவில்லைஎன்பது எனக்கே தெரியாத உண்மை. அவர் தம் தொழில்ரீதியான சட்டங்களை மீறித்தான் செல்வந்தராக இருந்திருக்கிறார். எனக்கு

எவ்விதக் குறையும் வராமல் பார்த்துக் கொண்டதுடன், அவர் குறைகள் எனக்குத் தெரியாமலும் பார்த்துக் கொண்டிருக்கிறார். திடீரென ஒரு நாள் அரெஸ்ட் வாரண்ட் வரும் நிலை உருவானது தெரிந்திருக்கிறது. ஒரே டென்ஷன். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுகிறார். நிலைமையை மறைக்க ஏதேதோ செய்கிறார். ஆரம்பத்திலிருந்து எனக்கெதுவும் தெரியாமல் வைத்திருந்ததால் அப்போதும் எனக்கொன்றும் புரியவில்லை. அவர் தொழில் நண்பர் ஒருவர். அன்னையன்பர் அவர். அடிக்கடி நேர்மை பற்றி அறிவுறுத்துவார். அப்போதும் எனக்கு நிலைமை புரியவில்லை. கிருஷ்ணன்என்ற அந்த நண்பரைமட்டுமே இவர் வீடு வரை அனுமதிப்பதைப் பலமுறை கண்டிருக்கிறேன். சிஸ்டர் என்றுதான் என்னைப் பாசமாக அழைப்பார். ஒரு நாள் இந்த நெருக்கடிகள் மிகுந்த சமயம் அது. உன் அண்ணன் இரவு 7 மணி சுமாருக்கே வீட்டிற்குள் ஓர் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார். எனக்கு எவ்வித சந்தேகமும் ஏற்படக் காரணமில்லா-திருந்ததால் அதை நான் பெரிதுபடுத்தவில்லை. ஏதோ வேலை மிகுதியில் ஓய்வெடுக்கிறார்என்று புரிந்து கொண்டிருந்தேன்.

சற்றைக்கெல்லாம் அந்த நண்பர் மிகுந்த பரபரப்பை மூடி மறைத்தவண்ணம் வந்தார்.

''சிஸ்டர், ராம் எங்கே?'' என்றார்.

அங்கு அறைக்குள் சென்றதைக் கூறினேன்.

''சிஸ்டர், நீங்கள் என்னைத் தவறாக எண்ணக்கூடாது. எனக்கொரு முக்கிய விஷயம் அவனுடன் கலந்து பேசவேண்டியுள்ள-தால் அவனை நான் கூப்பிட நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்'' என்று கூறியவர், விரைந்து சென்று அறையின் கதவைத் தட்டி, ''ராம், ராம், நான் கிருஷ்ணன் வந்திருக்கிறேன். ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும். தயவுசெய்து கதவைத் திற'' என்றார்.

இப்படியெல்லாம் இதுவரை நடந்ததில்லை ஆதலாலும், நிலைமையின் கடுமையை நான் அறியாதிருந்ததாலும், நண்பரின் உரிமைக் குரலை ரசித்துவிட்டு உள்ளே உணவு தயாரிக்கச் சென்று விட்டேன். அன்று ஏதோ முக்கிய வேலையென்று சமையற்கார அம்மாள் அனுமதி கேட்டுக் கொண்டு சென்றுவிட்டாள். இன்றொரு



நாள் நாமே சமைத்துப் பரிமாறுவோமேஎன்று எண்ணியிருந்தேன்.

சாப்பாட்டு நேரம் வந்துவிட்டதால், நண்பருடன் அவரைச் சாப்பிட அழைக்க எண்ணி அறைக்கு வெளியே சென்றவள் அதிர்ந்தேன். பொதுவாக அவர் தொழில் விஷயம் பேசும்போது நான் அங்கிருப்பதை அவர் விரும்பமாட்டார்என்பதால் நான் அவர் வந்து கூப்பிடும்வரை தலைகாட்டமாட்டேன். இன்று அவர்களைச் சாப்பிட அழைக்கவே வந்தேன். அங்கு நான் கேட்ட உரையாடல்,

''சந்தேகப்பட்டுத்தான் ஓடிவந்தேன். உன்போன்ற நேர்மை-யில்லாதவர்கள், வெளிப்பார்வைக்கு கம்பீரமாய் இருந்துகொண்டு உள்ளே கோழையாக இருப்பார்கள்''.

''யார் சொன்னது அப்படி? இத்தனை கஷ்டத்திலும் நான் கலங்கவில்லையே. துணிந்துதானே முடிவெடுத்திருக்கிறேன்''.

''என்ன முடிவு? விஷம் குடித்து சாவது உன்போன்ற வீரர்களுக்கு வீரச் செயல்தான். நீ தற்கொலை (நான் நடுங்கிப் போனேன்) செய்துகொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? ஒரு பாவமும் அறியாத உன் மனைவி உன் மரணத்திற்குப் பிறகு எத்தனை அவலங்களுக்கு ஆளாக நேரும்என்று நினைத்துப் பார்த்தாயா? எப்படியாவது நீ செய்த தவறுகளிலிருந்து தப்புவதே உன் வழக்கம். இதுவரை உன் அநியாயங்களுக்குத் துணை வந்த அரசியல் செல்வாக்கு இன்று உன்னைக் கைவிட்டுவிட்டது பார்த்தாயா? அரசியல் சூழல் நிலையற்றது. நிலையான ஒன்றை (பரம்பொருளைப்) பற்றும் பழக்கம் என்றுமே உன்னிடம் கிடையாது. உன் பிரச்சினைகளுக்குத் தீர்வு தற்கொலையில்லை''.

(உள்ளே மெல்ல எட்டிப் பார்த்தேன். ஏதோ சிறிய பாட்டில் ஒன்றைக் கையில் வைத்திருந்தார். என் மனக் கலக்கத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, நல்ல நண்பர் அவருடன் இருப்பதால் அதுவே இறைவனருள் என்று நம்பி மறைந்திருந்தேன்).

''நீ நினைப்பதுபோல், பிள்ளைகுட்டியில்லாத என் மனைவியைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடமாட்டேன். அவள் என்னை நம்புவாள். அவளுக்கும் சிறிது விஷம் கொடுத்து என்னுடனேயே அவளையும் அழைத்துச் செல்வேன்''.

"உன்னுயிரை மாய்த்துக்கொள்ளவே உனக்கு உரிமையில்லை. பாவம், சிஸ்டர் என்ன தவறு செய்தார்? அவரை ஏன் கொல்ல வேண்டும்? இறைவன் வாழ்வதற்காக நமக்களித்த வரம் இந்தவுயிர்".

"அதற்கென்ன செய்ய? எனக்கு உயிர் வாழ ஆசைதான். ஆனால் மானம், மரியாதையெல்லாம் போய் நடுத்தெருவில் நிற்கும் வாழ்வு ஒரு வாழ்வா? எத்தனை பெரிய பிரச்சினை என் முன் நிற்கிறதுஎன்பது என் அப்பாவி மனைவிக்குத் தெரியாது. ஆனால் உனக்குத் தெரியுமல்லவா?"

"பொய்யும், புரட்டுமாய், பணம், பகட்டு, மதிப்பு, மரியாதை என்று வாழ்ந்துவிட்டு அதை இழப்பது கடினம்தான். என்ன செய்வது? அந்த அகங்காரத்தை விட்டுவிடத் துணிந்தால், தவற்றை மனம் உவந்து ஏற்று, மாறச் சம்மதித்தால் ஆண்டவனே நேரில் வந்து விடுவானே. நமக்கு ஆண்டவன் முக்கியமில்லை. நம் மரியாதைதான் நமக்கு முக்கியம். அதைக் காப்பாற்றிக்கொள்ள எதையும் இழப்போம். ஆண்டவனையும் அர்ப்பணித்துவிடுவோம். அதுதான் நம்மிடமுள்ள பெருங்குறை".

"மானம் இழந்தபின் வாழக்கூடாது என்றுதானே பெரியவர்கள் கூறியுள்ளார்கள்".

"ஆமாம், ஆமாம். அவர்களுக்கு சத்தியஜீவியம் பற்றி ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. திருவுருமாற வழி தெரிந்திருக்கவில்லை. நான் எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் நீ திருந்தவில்லை. உன் தவறுகள் எல்லாம் திரண்டு ஒருருக்கொண்டு பிரம்மாண்டமாய் வந்து நிற்கும்போது சாவதன் மூலம் தப்பிவிடலாம்என்று தப்புக்கணக்குப் போடுகிறாய். இப்போதும்கூட உனக்கு வாய்ப்புத் தர அன்னை காத்திருக்கிறார்".

"ஆ, ஊஎன்றால் உனக்கு அன்னைதான். அன்னை நேற்று வந்த தெய்வம். பரம்பரை பரம்பரையாய் கடவுள் வழிபாடு செய்த குடும்பத்திலிருந்துதான் என் மனைவி வந்திருக்கிறாள். எனக்காக அவள் எப்போதுமே கடவுளை வழிபட்டுக் கொண்டுதானிருக்கிறாள். ஆனால் பயனென்ன? நேற்று பிரபல சோதிடர் ஒருவரிடம் போனேன். அரசியல் தலைவர்கள், திரையுலகப் பெரும்புள்ளிகள் யாவர்க்கும் சோதிடம் கூறி, அவை பலித்து, பல பட்டயங்கள் பெற்றவர். ஆனால்



அவர் என் ஜாதகத்தைப் பார்த்தவுடன், "இனி உங்களை யாவராலும் காப்பாற்ற முடியாது. உங்கள் ஜாதகம் உங்களுக்குச் சாதகமாய் இல்லை. பாதகமாயுள்ளது. எனக்குப் பொய் சொல்ல முடியாது" என்றார். ஏதேனும் பரிகாரம் உண்டா என்றேன். "கர்மம் கெட்டியாய் உங்களைப் பற்றியிருக்கிறது. கர்மத்தை கரைத்தவர் உண்டா? விதியை மாற்றியவர் உண்டா? நல்ல ஜாதகங்களைப் பார்த்துப் பலன் கூறிய எனக்கு இன்று உங்கள் ஜாதகத்தைப் பார்க்க நேர்ந்தது துரதிர்ஷ்டமே" என்றார். இறக்கத்தானே போகிறோம். இப்படிக் கொடுமையாய்ப் பேசியவரைக் கொன்றுவிட்டே இறப்போமே என்றுதான் வேகம் வந்தது. அவர் ஜாதகம் சரியாய் இருந்ததுபோலும். நான் வெறுத்துப்போய் வந்துவிட்டேன்".

"உன் மனைவி வழிபடும் கடவுளர்க்கு ஆயுளை நீட்டிக்கும் சக்தி இயல்பாகக் கிடையாது. சோதிடர் கூறியது காலத்திற்குக் கட்டுப்பட்டது. காலத்தையும், பிரபஞ்சத்தையும், சிருஷ்டியையும் கடந்த நிலையில் உள்ள ஈஸ்வரன்தான் Supreme. அவனுக்கு யாவுமே கட்டுப்பட்டது. அன்னை ஈஸ்வரனின் கடந்த நிலைக்குரியவர். There is no division between the Mother and the Supreme என்ற வாக்கு அருள்வாக்கு. அதை அறியும் வாய்ப்பாக இன்று உன் நிலையுள்ளது. உணர்ந்தால் அதிர்ஷ்டம். உனக்கு வந்திருக்கும் பெருந்துன்பத்திற்குப் பின்னே பேரதிர்ஷ்டமாய் அன்னை ஒளிந்திருக்கிறார். உன் பிடிவாதத்தால் உனக்கு வரவிருக்கும் அதிர்ஷ்டத்தை விலக்கி, ஆபத்தை வலியுறுத்தாதே".

"நீ என்னதான் சொல்கிறாய்? மானம் போனாலும் பரவாயில்லை, சாகாதே என்கிறாயா?"

"சாவதாலும் மானம் போவதைத் தடுத்து நிறுத்த முடியாது. நான் சொல்லும் அன்னை நம்மைத் திருவுருமாற்றவே அவதரித்தவர். திருடன் திருந்தினால் உயர்ந்தவனைவிட உயர்ந்தவனாவான் என்பது அவர் கூற்று. உனக்கு இப்போது பாதுகாப்புத் தரவல்லவர் அன்னைஎன்பதை நம்பு. அதற்கு நீ செய்ய வேண்டியது, நீ செய்த தவறுகளையெல்லாம் உணர்ந்து, அவற்றை இனி விட்டுவிடச் சம்மதிப்பதுதான். அவற்றை இனி நீ ஒருபோதும் நாடக்கூடாது. கர்மம் கெட்டியாக இருப்பதாய்ச் சோதிடர் கூறினாரல்லவா, அது

கெட்டிப்பட காரணமான உன் தவறுகளை அழித்துவிட்டால், சார்ந்து நிற்க இடமில்லாமல் அதுவும் கரைந்துபோகும்என்பது அவரறியாதது. கர்மத்தை கரைத்துவிட்டு அவர் முன் நீ நிற்கமுடியும். இதற்கு உதவ அன்னை காத்திருக்கிறார். இதுதான் அன்னை வழி''.

''ஒன்றா, இரண்டா? எப்படிச் சாத்தியம்? என் சாதகமான சூழல் எல்லாம் மாறிவிட்டது. நம்பிக்கை வரமறுக்கிறது கிருஷ்ணா. என்னை மன்னித்துவிடு. என்னைச் சாகவிடு''.

''என் கையில் அமுதம் உள்ளபோது உன்னை விஷம் குடிக்க அனுமதிப்பது முட்டாள்தனமில்லையா ராம்?''

''உன் அமுதம் யாரேனும் நல்லவருக்குப் பயன்படட்டும். அக்கிரமங்கள் செய்த எனக்குக் கொடுத்து அதை வீணாக்காதே''.

''மீண்டும் நீ தவறாகவே புரிந்து கொள்கிறாய். இந்த அமுதம் பாவத்தைக் கரைத்து, அதனுள் புதைந்திருக்கும் புண்ணியத்திற்கு உயிரூட்ட வல்லது. உன் மனதை மாற்று. எல்லோரும் கைவிட்டபின் ஓடிவரும் தெய்வமிது. இது செயல்பட நம்பிக்கைதான் உன் பங்கு. நீ அன்னையை நம்பு. இதுவரை செய்த பிழைகளையெல்லாம் அன்னையிடம் ஒளிவுமறைவின்றி சரணம் செய்துவிடு. இனி அவற்றைச் செய்யமாட்டேன்என அன்னைக்கு உறுதியளி. பிறகு பார், நிலைமை மாறுவதை''.

''என்ன உன் போதனை? விடிந்தால் என் கழுத்திற்குக் கத்தி காத்திருக்கிறது. இப்போது நான் மனம் மாறி என்ன பயன்?''

''இப்போதுதானே கூறினேன், உனக்குத் தேவை அன்னை மீது நம்பிக்கை. மனதை மாற்றிக் கொள்ள முடிவு செய்து பார். உன்னைத் திருவுருமாற்றவே இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது''.

''திருவுருமாற்றவா? நாளை உன் உருவம் மாறி, ஆள்மாறாட்டம் ஏதேனும் நிகழுமா?''

''திருவுருமாற்றமென்றால் ஆள்மாறாட்டமில்லை. புறத்தோற்றத்தின் மாறுபாட்டைச் சொல்லவில்லை. அன்னை சக்திக்கு துன்பத்தை அதற்கெதிரான பேரின்பமாக மாற்றும் திறனுண்டு. ஒவ்வொரு தீய குணத்தையும், கெட்ட சுபாவத்தையும் அதற்கெதிரான தெய்வீக குணமாக, சுபாவமாக மாற்றுவதுதான் திருவுருமாற்றம்''.

''அதை அன்னையே செய்வாரா?''



''செய்வார். அதற்கு நீ உன் தீயகுணத்தை உணர்ந்து ஒப்புக் கொள்ள வேண்டும். மாற சம்மதித்து, அவற்றை அன்னைக்குச் சரணம் செய்துவிட வேண்டும். அதற்குத்தான் மாற்றம்என்று பெயர். மனம் மாறினால் அருள் செயல்படுவதை நீ ஏற்கிறாய்என்று பொருள். அருள் செயல்பட்டால் அதன் முன் நிற்கவல்லது எது? உணர்வு மாறினால் உலகமே மாறும்''.

''அப்படியே நீ சொல்லும்படிப் பார்த்தாலும் என் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு அரெஸ்ட் வாரண்ட்வரை வந்தபின் மாறி என்ன பயன்? ஜெயிலுக்குப் போய் திருந்தி வரச் சொல்கிறாயா?''

''நீ உலகியலை நம்புகிறாய். அதைக் கடந்த நிலையிலுள்ள ஓர் அற்புதத்தை நம்ப மறுக்கிறாய்''.

''நீ ஏன் கிருஷ்ணா இவ்வளவு பாடுபடுகிறாய்?''

''நீ என் நண்பன். நண்பனுக்குக் கடமையுண்டல்லவா? நடந்த நிகழ்ச்சியானாலும் முடிவை நிர்ணயிப்பது செய்தியில்லை. உள்ளுறை உணர்வுதான் முடிவை நிர்ணயிக்கும். உணர்வு சரியாக இருந்து மனம் அன்னையில் இருந்தால் நல்ல செய்தி மட்டுமே வரும். நடக்கவிருக்கும் கெட்டது தடம்மாறி நல்லதாக நடக்கும்''.

''கிருஷ்ணா, நல்ல நேரத்தில் வந்து என்னைக் கொலை செய்யும் தவற்றிலிருந்து காப்பாற்றினாய். திடீரென எனக்குள் ஏதோ ரசவாதம் நிகழ்வது போலுணர்கிறேன். இனி தவறு செய்யப் போவதில்லை. சற்றுமுன்வரை நீ கூறுவதெல்லாம் கட்டுக்கதை; செல்வமும் செல்வாக்குமே சாதிக்கும்என நம்பினேன். திடீரென அந்தரத்தில் தொங்குவதுபோல் உணர்கிறேன். பற்றிக்கொள்ளத் தவித்தபோது உன் அன்னை தம் திருவடிகளை நீட்டுகிறார். பற்றிக் கொண்டுவிட்டேன். என் சாமர்த்தியத்தில் ஒன்றுமில்லைஎன்பதை நன்றாகவே உணர்ந்துவிட்டேன். குழம்பிக்கிடந்த என் மனம் நன்றாகவே தெளிந்துவிட்டது. அரெஸ்ட் வாரண்ட் பற்றிய அச்சம்கூட போய்விட்டது. நேற்றுவரை வாழ்ந்த வாழ்வின் அசிங்கம் இனிப் பிடிக்கவில்லை. இந்தக் குற்றங்களிலிருந்து தப்பிக்க நான் எந்த முயற்சியும் செய்யமாட்டேன். அன்னை கொடுக்கும் எதையும் மனமுவந்து ஏற்பேன்''.

(இதைக் கேட்டதும் நான் அவர் தற்கொலை

முயற்சியிலிருந்து விடுபட்டது எண்ணி உருகி கடவுளுக்கு நன்றி கூறினேன். திடீரென டெலிபோன் மணி ஒலித்தது. எனக்குக் கலவரமானது. மீண்டும் மனதில் இறைவா, இறைவா என்று ஜபித்தேன்).

''கிருஷ்ணா, நீ கூறியது அனைத்தும் சத்யம். அன்னை சக்தி மிகப்பெரியதுஎன இக்கணமே உணர்ந்தேன்''.

(நண்பனின் கையைப் பற்றியவண்ணம் நெகிழ்வுடன் கண்ணீர் உகுத்தார்).

''போனில் பேசியது யார் ராம்?''

''நம் மகேந்திரன்தான்''.

''அட! மகேந்திரனா? எங்கிருந்து பேசினான்?''

''அமெரிக்காவிலிருந்து வந்துவிட்டானாம். நேற்று பேப்பரில் என்னைப் பற்றிய செய்திகளைப் பார்த்தானாம். தந்தைக்கு நிகராக தான் நேசித்த எனக்குக் கஷ்டம்என்றதும் என்னிடம்கூடத் தொடர்பு கொள்ளாமல் என்னை இதிலிருந்து மீட்பதற்கு ஆவன செய்துவிட்டு, இப்போது நான் எப்படிப்பட்ட மனநிலையில் இருப்பேனோஎன்று எனக்குப் போன் செய்து, 'கத்தி விலகியது, கவலை வேண்டாம்' என்கிறான். உண்மையில் அவன் இப்போது வரவேண்டிய நிலைமையே இல்லையாம். புதிய காரணம் ஏற்பட்டு அவசரமாய் வர நேர்ந்ததாம். வந்தவிடத்தில் என் செய்தி கேட்க நேர்ந்து உடனே ஆவன செய்திருக்கிறான்''.

(மகேந்திரன் பெற்றோர் இல்லாதவன். எந்த ஜன்ம பாக்கியோ தற்செயலாக அவனுக்குச் செய்த உதவியால் அவன் இவரை அப்பாவாகவே கொண்டாடுவான். மேன்மேலும் படித்து உயர்ந்து பெரிய திட்டம் ஒன்றை முடிக்க அமெரிக்கா சென்றிருந்தான். அவன் வர இன்னும் 2 மாத காலக்கெடு இருந்தது. மேலும் தன் மீது மரியாதை கொண்ட அவனுக்குத் தன்னிலை தெரிவதற்குள் தன்னை முடித்துக்கொள்ளவும் நினைத்திருக்கிறார் ராம்).

''பார்த்தாயா ராம்? உன்னைத் திருவுருமாற்ற அன்னை எண்ணிவிட்டார். நீ மாறமாட்டேன்என்றால் முடியுமா? இந்தக் குற்றங்களிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யமாட்டேனென்று நீ கூறினாயல்லவா? அதுதான் சரி. அன்னையே ஓரன்பருக்குக் கூறிய மந்திரமொழி என்ன தெரியுமா? "Mother knows everything. I should not worry about anything. She will arrange everything". "அன்னையின் பாதங்களைப் பற்றிக் கொண்டேன். அவர் கொடுப்பதை உவந்து ஏற்பேன்" என்று சொன்னாயல்லவா? உடனே அவர் செய்த ஏற்பாட்டைப் பார்த்தாயா? இனி நீ கனவிலும் தவறான வழி செல்லக்கூடாது. வா, சிஸ்டர் கையால் பரிமாற, சாப்பிடுவோம்''.

(இருவரும் பெரும் நிம்மதியுடன் சாப்பிட வந்தனர்).

மறுநாள் நிகழ்ந்தவைகளோ பேர் அற்புதங்கள். எல்லாப் பத்திரிகைகளும், ''தொழிலதிபர் ராம் மீது தவறான குற்றச்சாட்டுகள். பெரிய மனம் படைத்த ராம் எதிர் வழக்கிடாமல் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்'' என்று செய்தி வெளியிட்டிருந்தன. அதையும் தாண்டி இவர் தவறு செய்தபோதெல்லாம் நன்மையடைந்திருந்த பலர் (அது இவருக்கே தெரிந்திருக்கவில்லை), ''எங்களுக்கு நன்மை செய்துவிட்டு, நீங்கள் அவப்பெயர் ஏற்றீர்களே'' என்று அவர் பெருந்தன்மையைப் புகழ்ந்தவண்ணம் கூறிச் சென்றனர். அதற்கும் மேலாக இவர் மீது புகார் கொடுத்த நபர், ''உங்கள் நல்ல மனம் அறியாமல் உங்களைச் சிறிது காலம் அவப்பெயருக்கு உள்ளாக்கி விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அன்னையே போதும். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்துவிடல்' என்பது இதுதானா? என்று நன்றியால் உருகியதுடன் உடனே பாண்டி வந்து மனமுருகி அன்னையிடம் சரணம் செய்தார். அதன் பிறகு இவர் நேர்மைக்கே இலக்கணமாகி முன்னோடி ஆகிவிட்டார்''.

''அப்படியென்றால் அண்ணன் பலமுறை பாண்டி வந்தாரா? ஏன் இங்கு வீட்டிற்கு வரவில்லை?''

''தரிசனத்திற்கு வரும்போது வேறொன்றையும் அதனுடன் கலக்கக்கூடாதென என்னிடம்கூடத் தெரிவிக்காமல் திடீர், திடீர் என வருவார். பிறகுதான் என்னிடம் சொல்வார். இம்முறை என்னை

அழைத்து வந்ததால் இங்கு நேரே வந்தோம்''.

''அண்ணி, முக்கியமான ஒன்றைச் சொல்ல மறந்து விட்டீர்கள். மகேந்திரன் என்பவர் போனில் கழுத்திற்குக் கத்தி விலகிவிட்டது, கவலை வேண்டாம்எனக் கூறினாரே, அவர் யார்? அவர் நேரில் வந்து ஏதும் சொல்லவில்லையா?''

''ஆமாம், ஆமாம். அதைச் சொல்ல மறந்தது என் தவறுதான். நல்ல வேளை, தேன்மொழி நீயாவது நினைவுபடுத்தினாயே. அதில்தானே சூட்சுமமே அடங்கியிருந்தது'' என்று அண்ணி தொடர்ந்தார்.

வாணியோ, சுவாரஸ்யமான படம் ஒன்றைப் பார்க்கும் நிலையில் இருந்தாள்.

''மறுநாள் மாலையே, தன் அப்பாவாகக் கருதும் இவரைத் தேடி அன்புடன் வந்தான். இனி அவர்கள் உரையாடலை இங்கு தருகிறேன்.

''மகேந்திரா! நீயா? வா, வா. எப்போது சென்னை வந்தாய்? எப்படி வந்தாய்? என்பொருட்டு என்ன மாயம் செய்தாய்?'' (என்று உணர்ச்சி வசப்பட்டு அவனைப் பற்றி அணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார் உன் அண்ணன்).

''வாருங்கள், உள்ளே போய்ப் பேசுவோம். நீங்களும் வாருங்கள் அம்மா'' என்று கூறியவண்ணம் அவரை அணைத்துப் பிடித்து மாடி அறைக்கு அழைத்துச் சென்று இருக்கையில் உட்கார வைத்துவிட்டுப் பேசினான். ''மாயம் செய்தது நானல்லேன், மதர்'' என்றான் நிதானமாக. ''மதரா? அன்னையைத் தெரியுமா உனக்கு?'' (மிகுந்த வியப்புடன் கேட்டார் இவர்).

''ஆம், அன்னையை எனக்குக் கொடுத்தவரே நீங்கள்தாமே அப்பா?''

''நானா? அன்னையை அறிமுகப்படுத்தினேனா? நேற்றிரவு வரை கிருஷ்ணன் எவ்வளவு எடுத்துக் கூறியும் புரியாதிருந்து, நேற்றிரவுதானே நானே அன்னையை உணர்ந்தேன். அப்படியிருக்க நான் எப்படி அன்னையை உனக்குத் தந்திருக்க முடியும்?''

''ஆம் அப்பா. உங்களை அறியாமலேயே நீங்கள் அதைச் செய்திருக்கிறீர்கள்''.



''ஒன்றும் புரியவில்லையே மகேன்''.

''முதன்முதலில் என்னைப் பேராபத்திலிருந்து மீட்டு வந்தீர்களே, அப்போது நீங்கள் அன்னையாகத்தான் என் வாழ்வில் வந்தீர்கள்''.

''என்ன சொல்கிறாய் நீ?''

''அனாதைச் சிறுவனான நான் பல சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது ஒருவர் என்னை ஓரன்னை அன்பரான பெரியவரிடம் செலுத்தினார். அவர் எனக்கு அன்னையைப் பற்றியெல்லாம் கூறி, ''நீ அன்னையைச் சரணடைந்து விடு. உன் பொறுப்பை அவர் ஏற்பார்'' என்று கூறினார். அதை நான் சத்தியவாக்காக ஏற்றிருந்தேன். அப்போதுதான் ஒரு மோசடிப் பேர்வழி அனாதையான என்னைத் தன் தொழிலுக்காக என்னைப் பிடிக்க வந்தான். நான் தப்பிக்க வழியறியாமல் அன்னையை நினைத்து அழுதபோதுதான் காரில் அவ்வழியே சென்ற நீங்கள் காரை நிறுத்தி அவனிடமிருந்து என்னைக் காப்பாற்றி உங்கள் வீட்டிற்குக் காரிலேயே அழைத்து வந்து ஒரு தாயின் பரிவுடன் நடந்து கொண்டீர்கள். அக்கணமே உங்களை என் தந்தையின் இடத்தில் வைத்துவிட்டேன். என் படிப்பிற்கு, பாதுகாப்பிற்கு, யாவற்றிற்கும் அளவு கடந்து உதவினீர்கள். நான் அடிக்கடி இங்கு வரும்போதெல்லாம் கிருஷ்ணன் அங்கிள் உங்களுக்கு அறிவுரை சொல்வதையெல்லாம் கவனித்திருக்கிறேன். உங்கள் திறமையும், உழைப்பும் நாணயமற்ற வழியிலே சென்று கொண்டிருப்பதாய் அங்கிள் வருத்தப்படுவார். இருந்தும் நான் எதுவும் தெரிந்ததாய்க் காட்டிக் கொள்ளவில்லை. எனக்கு அன்னையைப் பற்றிக் கூறிய பெரியவரிடம் அது பற்றிச் சொல்லி வருந்தினேன். நான் தங்களைத் தந்தை போல் எண்ணி நேசிப்பதாய்ச் சொன்னேன். உங்களைத் தீய வழியிலிருந்து மீட்கக்கூடுமா? என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அந்தப் பெரியவர், ''நீ அவருடைய தீமைகளுக்கு மானசீகமாய்ப் பொறுப்பேற்று அவரை இக்குற்றங்களிலிருந்து மீட்கத் துணிவாயானால் அவருக்கு இவற்றிலிருந்து மீட்சியுண்டு'' என்றார். அப்பொழுதே உம் பிழைகளுக்குப் பொறுப்பேற்க ஒப்புக்கொண்டேன். அன்னையிடம் உங்களைச் சரண் செய்தேன். ஓயாது உம் மனமாற்றத்தை

அன்னையிடம் வேண்டிக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் எங்கள் அமெரிக்க நண்பர் அவர் மேற்கொண்டுள்ள திட்டத்திற்குப் பொறுப்பேற்க என்னை அழைத்தார். அது அன்னை முறைகளை ஏற்று பிரச்சினைகளை வாய்ப்பாக மாற்றுவது; அதன் மூலம் அன்னையை ஜீவனின் சிகரத்தில் ஏற்பது போன்றவற்றின் அமைப்பை உள்ளடக்கியது. அந்த அமெரிக்க அன்பர் நான் கூறிய பெரியவரின் வழிகாட்டுதலுடன் அன்னையை அதிகம் ஏற்றவர். சிறியது, பெரியது என்றில்லாமல் அன்றாட நிகழ்ச்சிகளை அன்னையால் அமைத்துக் கொண்டவர். அந்தப் பெரியவர்தாம் என்னையும் அத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளச் சொல்லி அமெரிக்க அன்பருக்கு செய்தி அனுப்பியிருந்தார். பெரியவரின் ஆசியுடன்தான் நான் அமெரிக்கா சென்றேன். ஆன்மீகம் பற்றிய திட்டமானதால் பறையறை செய்யாமலிருப்பது நல்லது என்பதால்தான் யாருக்கும் விபரம் சொல்லவில்லை. நேற்று முன்தினமே நான் இந்தியா வந்துவிட்டேன். எங்களுக்கு வழிகாட்டும் பெரியவர் அழைப்பை ஏற்றுதான் வந்தேன். நாங்கள் மேற்கொண்ட திட்டம் தொடர்பான உண்மை நிகழ்ச்சியை எனக்குக் காட்டப்போவதாக உடனே வரச் சொல்லியிருந்தார். வந்தபோது உங்கள் செய்தி அரெஸ்ட் வாரண்ட் வரை வந்துவிட்டது தெரிந்தது. பெரியவரிடம் கூறினேன். எங்கள் திட்டத்தில் தொடர்புடைய அன்பர் இங்கு சென்னையில் இருக்கிறார். அவரை நேரில் பார்த்து யாவற்றையும் சொல்லச் சொன்னார். அவரிடம் சொன்னேன். அவர், முதலில் உங்கள் மனமாற்றத்திற்காக நாம் பிரார்த்திப்போம் என்றார். உடனே நான் என்னையே நீங்களாகப் பாவித்து அன்னை முன்னமர்ந்து உங்கள் பிழைகளை நீங்கள் மனமார ஏற்று, அன்னை முன் சரணடைந்துவிட்டதாக மீண்டும் மீண்டும் பயிற்சி செய்தேன். அப்போது எனக்கு ஓர் அகக்காட்சி கிடைத்தது. ஒரு போலீஸ் அதிகாரி உம் கையில் விலங்கு மாட்ட வருவதாயும், இடையில் அன்னை வந்து விலங்கை பற்றி வீசி எறிந்துவிட்டு உம்மை அணைத்துக் கொண்டார். சிலிர்த்து விழித்தேன்.

மேற்படி திட்டத்தில் உள்ள அன்பர், உம்மீது புகார் கொடுத்த நண்பரைச் சந்தித்து நீர் உம் பிழைகளைப் பூரணமாக உணர்ந்து



ஏற்றுக் கொண்டதாயும், இனி உங்களைத் தண்டிக்க அவசியமிராது என்பது பற்றியும் விரிவாகப் பேசியிருக்கிறார். புகார் அளித்தவரின் மகனும் எங்கள் திட்டத்துடன் தொடர்பு கொண்டவர். அவரும் எனக்காகப் பேசியிருக்கிறார். கணப்போதில் அன்னை செயல்பட்டு, புகார் கொடுத்தவரே, குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதிஎனத் தெரியவந்ததால் தாமே தம் புகார் மனுவைத் திரும்பப் பெறுவதாயும், இனி உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமெனவும் எழுதிவிட்டார். இரவோடிரவாகச் செய்தித்தாள்களுக்குச் செய்தி போய்விட்டது. கிருஷ்ணன் அங்கிள் உம்மைத் தேடி இங்கு வந்து உம்முடன் இருப்பதை நான் விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டேன். எனக்கு அன்னை மீது அளவுகடந்த நம்பிக்கையுண்டு. எங்களுக்கு வழிகாட்டும் பெரியவர், முன்பே உங்களுக்குத் திருவுருமாற்ற வாய்ப்பு உண்டுஎன்று கூறியுள்ளார். எனவே, தக்க சமயத்தில் யாவும் நிகழும்என்று நம்பி நிதானமாய்ச் செயல்பட்டேன். ''அன்னை நம்மை நாடி வரும் தெய்வம்'' என்பது எத்தனை உண்மை''.

''அண்ணனிடம் பழைய அலட்டல் ஒன்றுமில்லை. மிக அடக்கமாக மாறிவிட்டாரே'' என்றாள் தேன்மொழி.

''அன்னை அன்பர்க்கு இருக்க வேண்டிய தகுதியே அதுதான்'' என்றார் அண்ணி.

வாணி மெய்ம்மறந்து பக்கத்தில் வந்து நின்று கொண்டிருப்பதைப் பார்த்த அண்ணி, ''வாணி, அன்னையில் மயங்கிப் போனாயா?'' என்றார்.

'ஆம்' என்பதுபோல் தலையசைத்தாள் வாணி. எஜமானியம்-மாள் அண்ணியாரிடம், ''வாணி மிகவும் நல்ல பெண். இவள் கணவன் இவளைத் தள்ளி வைத்துவிட்டு வேறொருத்தியுடன் வாழ்கிறான். நம் நாட்டுப் பெண்கள் நிலைதான் தெரியாதா? நன்றாக வாழும்போதே ஆயிரம் குற்றம் சொல்லும் சமுதாயம். இவளைச் சொல்லக் கேட்க வேண்டுமா? மிகவும் நல்லவள். நான்தான் இவளை வேலைக்குச் சேர்த்துக் கொண்டேன்''.

''அன்னை பெண்களுக்கும் நிறைய சொல்லியிருக்கிறார்'' என்றார் அண்ணி.

வாணி மெல்ல அண்ணியாரிடம் வந்து, ''நீங்கள்

கூறியதெல்லாம் நானும் கேட்டேன். ஏதோ சக்தி, அன்னை என்றெல்லாம் கூறினீர்கள், அந்த அன்னையைப் பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்லக்கூடாதா? அவர்கள் தெய்வம் என்றீர்கள். பூவுலகில் சூட்சுமமாக இருப்பதாகவும் சொன்னீர்கள். எனக்கு விளக்கமாய்த் தெரிந்து கொள்ள மிகவும் ஆவலாய் இருக்கிறது''.

''சரி, இப்போது உன் வேலைகளைச் செய்து முடித்துவிட்டு வா. முதலில் தியான மையம் சென்று வருவோம். வந்து அவரைப் பற்றி நிறைய சொல்கிறேன்'' என்றார் அண்ணி.

அன்னை தரிசனம் முடித்து, வரும் வழியிலேயே அண்ணி, அன்னையைப் பற்றி தாமறிந்த செய்திகளையெல்லாம் சொன்னார்.

''அன்னை என்று ஸ்ரீ அரவிந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட அவர் பிரான்ஸ் தேசத்தில் அவதரித்தவர். மனிதனுக்குள் உள்ள தெய்வீகத்தை அவனுக்கு உணர்த்த வந்தவர். எளிய மனிதப் பெண்ணாய் வந்து, எல்லோரும் காணும்படி வாழ்ந்தவர். இங்கு புதுவையில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் பூரணயோகம் என்ற யோகத்தை மேற்கொண்டபோது அந்த யோகப் பலனை நமக்குப் பெற்றுத் தரும் தாயாய் இருந்தவர். தம்மை உண்மையாய் பக்தி செய்தவர்க்கெல்லாம் பரமானந்தமாய் இருப்பவர். இறையார்வம் உள்ளவர்க்கு எளிதில் கிடைப்பவர். கடவுள் சக்தியைச் சுமந்து நிற்பவர். உயர் சாதனை புரிய விரும்புகின்றவர் அவரை ஏற்றால், சாதிக்க துணை நிற்பவர். கஷ்ட காலத்தில் தோழியாய் இருப்பார். சோதனை செய்யமாட்டார். பொய் அவருக்குப் பிடிக்காது. சத்தியமே அவர் சக்தி. நல்லெண்ணத்திற்கு பிறப்பிடம். அக்காலங்களில் பெண்களை யோகத்திற்கு யாரும் அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் அன்னை பெண்களை யோகத்திற்கு அனுமதித்தார். பெண்களை அடிமைப்படுத்துவதை அவர் விரும்பமாட்டார். பெண்களுக்கு இயல்பாய் இருந்த மூன்று குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அதை எப்படி மாற்றினால் சிறந்தது என்பதையும் கூறியிருக்கிறார்.

பெண்கள் தாய்மையை விரும்புவது, ஆணின் வலிமையால் ஈர்க்கப்படுவது, சொந்த வீடு வேண்டும் என விரும்புவது என்ற மூன்றும் அவர்களைப் பிணித்துள்ள கட்டுகள் என்று சொல்லியிருக்கிறார்''.



''அப்படியென்றால் தாய்மை என்பது சிறந்ததில்லையா?'' என்று துணுக்குற்றுக் கேட்டாள் வாணி.

''தன் வீடு, தன் குழந்தை என்ற அளவில் பாசம் அவளைச் சுயநலப்படுத்துகிறது. அந்தச் சுயநலமான பாசத்திலிருந்து தன்னை விடுவித்து, தூய அன்பாக அதை மாற்றினால், சுயநலம் அழிந்து உயர்ந்த பரநலம் வந்துவிடும். சொந்த வீடு என்பது சொத்தால் வரும் பாதுகாப்பு. அன்னையின் அருளை நாடினால் பாதுகாப்பு நிரந்தரமாயும், அளவுகடந்தும் கிடைக்கும். ஆண்களின் வலிமையை பெண் விரும்புவது அச்சத்தால் பெறும் ஆதரவு. இறைவனின் அருளை நம்பினால் சமூகமே வலிமை மிக்க ஆதரவாய் அமைந்துவிடும்''.

''எல்லாம் சரிதான் அண்ணி. அவர் இப்போது எங்கே இருக்கிறார்'' என்றாள் தேன்மொழி.

''96 ஆண்டுகள் மனித வடிவில் இருந்தார். உணர்த்த வந்ததை நமக்கெல்லாம் உணர்த்திவிட்டு, ஸ்தூல உடம்பை விட்டுவிட்டு, கண்ணுக்குப் புலப்படாத சக்தியாய் பூலோகத்தில் தங்கிவிட்டார்'' என்றார் அண்ணி.

நாம் அவரை அன்புடன் நினைத்தாலும், அழைத்தாலும் அவர் சக்தி வந்து நமக்காகச் செயல்படும்.

அன்னையைப் பற்றி, அண்ணியார் ஊருக்குப் புறப்படும் வரை நிறைய செய்திகள், நிகழ்ச்சிகள் என்று ஏதேனும் கூறியபடி இருப்பார். பொருட்களைத் தாறுமாறாய் அடுக்கினால், ''வாணி, இது மதருக்குப் பிடிக்காது. முதலில் அவர் பொருட்களை ஒழுங்காக அடுக்கும் முறையைத்தான் சாதகர்க்குக் கற்பித்திருக்கிறார். அது நமக்கும் அவர் சொல்லியதாக புரிந்து ஏற்றுக்கொள்வது நாம் அவரை ஏற்றிருப்பதற்கு அடையாளம்'' என்பார். வாணியும் மகிழ்ச்சியுடன் புத்தக அலமாரி, புடவை, துணி வைக்கும் பீரோ, அடுக்களை சாமான்கள் என்பதை ஒழுங்குபடுத்திவிட்டு அண்ணியை அழைத்து வந்து காட்டுவாள். ''ஆகா, எத்தனை திறமை உனக்குள் ஒளிந்திருக்கிறது பார்த்தாயா வாணி!'' என்று மகிழ்வார். அன்னை தன் முதுகில் தட்டிப் பாராட்டியது போலிருக்கும் வாணிக்கு.

''இன்னும் என்னவெல்லாம் அன்னைக்குப் பிடிக்கும் என்று

சொல்லுங்கள் அண்ணி'' என்பாள் வாணி.

''சுத்தம் பிடிக்கும், சுறுசுறுப்புப் பிடிக்கும், நல்ல எண்ணம் ரொம்ப ரொம்பப் பிடிக்கும், தாழ்ந்த குரலில் தேவைக்கு அளவாகப் பேசுவது பிடிக்கும், எல்லாப் பூக்களும் பிடிக்கும்'' என்று சொல்லச் சொல்ல குழந்தைபோல் ஆவலுடன் கேட்டுக் கொள்வாள்.

''அன்னைக்கு எதெல்லாம் பிடிக்காது என்பதையும் சொல்லிவிடுங்கள் அண்ணி'' என்றாள் வாணி.

''பொய் பிடிக்காது, அசுத்தம் பிடிக்காது, வம்பு பேசுவது பிடிக்காது, பொருட்களை விரயம் செய்வது பிடிக்காது, சோம்பல் அறவே பிடிக்காது''.

''இதெல்லாம் எல்லாப் பெரியவர்களும் சொல்லக்கூடியதுதானே அண்ணி?'' என்றாள் கள்ளமில்லாது.

''வாழ்வில் இவற்றைச் செய்வதால் நல்ல பெயர் வரும், அவ்வளவுதான். அன்னையை ஏற்றுச் செய்யும்போது அதிர்ஷ்டம் வரும். அன்னைக்காகச் செய்யும்போது அன்னையே வருவார்'' என்றாள் அண்ணி.

''அன்னையே வருவாரா! அவரை நான் பார்க்க முடியுமா!'' என்று ஆர்வம் ததும்பக் கேட்டாள் வாணி.

''பார்க்க வேண்டும் என்ற தணியாத ஆவல் இருந்தால் நிச்சயம் பார்க்க முடியும். எங்கும், எப்போதும் அவர் இருந்து கொண்டுதானிருக்கிறார். பார்க்கும் தெளிவு நமக்கிருப்பதில்லை'' என்றெல்லாம் கூறியவர் அன்னையைப் பற்றிய எளிய முறையில் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றையும் அன்னையின் திருவுருவப் படம் ஒன்றையும் அவளுக்கு அன்புடன் தந்தார்.

ஒரு நாள் ஓரன்னையன்பரைக் காணவும் அண்ணி சென்று வந்தார். வந்து அந்த அன்பர் அன்னை மீது கொண்டுள்ள பக்தியும், நம்பிக்கையும், அவரை அன்னை மயமாக்கியிருப்பதையும், அவரைக் கண்டதே அன்னையைத் தரிசிப்பது போன்றிருந்ததையும், அவர் அன்னையிடம் நேரில் அருளாசிகளுடன் பல பரிசுப் பொருட்களைப் பெற்று அவற்றைப் பொக்கிஷமாய்ப் போற்றுவதையும் விவரித்தார். இவ்வாறு அன்னையை அங்கு ஊன்றிவிட்டு அவர்கள் ஊருக்குச் சென்றனர்.



அது முதல் வாணிக்கு அன்னையைப் பற்றிய கற்பனைகள். ஒரு முறை ஆசிரமத்துச் சாதகி அன்னையிடம் ஸ்ரீ கிருஷ்ணன் தன் அகக்காட்சியில் வந்ததாக மகிழ்ந்து கூறினாளாம். அதைக் கேட்டுப் புன்னகை செய்த அன்னை அந்தச் சாதகி சென்றவுடன் அருகே நின்றிருந்த சாதகரிடம், ''அவள் என்னைத்தான் அந்த வடிவில் பார்த்திருக்கிறாள்'' என்றாராம்.

அதற்கு அந்தச் சாதகர், ''நீர் பெண் அல்லரோ, ஸ்ரீ கிருஷ்ணன் ஆடவரல்லரோ?'' என்றாராம். அதற்கு அன்னை சிரித்து, ''அவையெல்லாம் முக்கியமல்ல'' என்று கூறினாராம். இந்நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தபோது வாணிக்குச் சிறிது குழப்பமேற்பட்டது. ''அண்ணி, அன்னை ஆணா? பெண்ணா? கிருஷ்ணரும் அவரும் ஒன்றா?'' என்று கள்ளமில்லாமல் கேட்டாள்.

''பரம்பொருளுக்கு எவ்வித வரையறையும் இல்லை. அது ஆணாகும், பெண்ணாகும். நாம் எதில் அதை உணர்கிறோமோ அதுவாக அது காட்சி தரும் என்று புரிந்து கொண்டால் குழப்பமில்லை'' என்று பரிவுடன் கூறியிருந்தார் அண்ணி.

படிப்பறிவில்லாத எளிய பாமரப் பெண்ணான அவள், மிகப்பெரிய கடவுள் அன்னைதான் என்று உறுதியாக நம்பினாள். சதா அன்னையைப் பற்றி அண்ணியார் கூறிய செய்திகள், நிகழ்ச்சிகள் மனதில் சுழன்றபடி இருந்தது.

இவ்வாறாக வாணியின் வாழ்வில் அன்னையின் பிரவேசம் நிகழ்ந்துவிட்டது. அதன் விளைவான அருட்பிரசாதத்தை அவள் எப்படிப் பெற்றாள் என்பதையும் பார்த்துவிடுவோம்.

முகமெல்லாம் பிரகாசிக்க தன் இதயம் கவர்ந்தவனின் இனிய நினைவில் வலம் வரும் இளம் பெண்ணாக வளையவரும் வாணியை அவள் தாத்தா கண்டு வியக்கிறார்.

''என்ன வாணி, இப்போவெல்லாம் ஏதோ ஆகாசத்துல பறக்குறாப்பல இருக்குற'' என்றார் தாத்தா.

''ஆமா தாத்தா. சந்தோஷத்தால ஆகாசத்தில பறக்குறேன்'' என்கிறாள் வாணி.

''எங்ஙனா ஒம் புருஷங்காரனப் பாத்தியா?''

''இல்ல தாத்தா. இது வேற'' என்றாள்.

“புருஷனவிட என்ன சந்தோஷம் ஒனக்கு?”

“அதுவா? நா வேல செய்யுற வீட்ல சென்னப் பட்டணத்து சனங்க சாமி கும்பிட வந்தாங்க. அவங்க பேசற பேச்சுல ஒரு சந்தோஷ சமாச்சாரம் கெடச்சுது. அதுதான் எந்நேரமும் என்னெ ஆட்டிப்படைக்குது” என்று துள்ளும் மகிழ்வுடன் கூறுகிறாள்.

“அட, அதெ எனக்கும் சொல்லம்மா” என்று கெஞ்சும் பாவனையில் தாத்தா கேட்டார்.

“இந்த வூர்ல (பாண்டிச்சேரி) அன்னைன்னு ஒரு மனுஷ தெய்வம் இருந்திச்சாம். இப்பவும் அது பூலோகத்துக்குள்ள கண்ணுக்குத் தெரியாம சக்தியா இருக்குதாம். அதை வேண்டிக்கிட்டா எல்லாம் நடக்குமாம். அதால முடியாததே இல்லையாம். அதெ நாம கள்ளங்கவடில்லாம நம்பினா போதுமாம். அது நம்ம கூடவே இருக்க நம்ம மனசையும், இடத்தையும் சுத்தமா வெச்சுக்கிடணுமாம்”.

“அதுதான் சொம்மா வீட்டெ சுத்தம் பண்ணிக்கினு இருக்கியா?” என்று கேலி செய்தார்.

“நீ கேலி பேசுற. நடந்த சமாச்சாரத்தை கேட்டீனா சிலுத்துடுவே” என்று சிலிர்ப்புடன் கூறினாள்.

“அப்படி என்ன புள்ள நடந்திச்சு?”

“யாருனா அநியாயம், அக்கிரம்பு செஞ்சு மாட்டிக்கினா தப்பிச்சுடுவாங்களா?” என்றாள்.

“தப்ப விடக்கூடாது புள்ள. விட்டா மேல மேல அநியாயம் செய்வாங்க” என்றார் தாத்தா.

“அதுதான் இல்ல. அன்னைகிட்ட தாஞ் செஞ்ச தப்பையெல்லாம் ஒத்துக்கிட்டு இனி கனாவுலயும் அதெச் செய்யறதில்லேன்னு சத்தியம் செஞ்சா அவுங்க மன்னிச்சுடுவாங்க”.

“அவுங்க மன்னிச்சா போதுமாம்மா. தெய்வம் எப்பவும் மன்னிச்சுடும். அதனால தப்பு செஞ்சு மாட்டினவன ஒலகம் மதிக்காதும்மா” என்று வருந்திக் கூறினார் தாத்தா.

“அதுதான் இல்ல. அன்னையால மாறினவங்கள ஒலகம் தலைல வைச்சு கொண்டாடும்” என்றாள் பெருமையாக.

“இதெல்லாம் நம்புறாப்பல இல்லம்மா” என்றார் தாத்தா.



“விஷயத்தை கேட்டீனா நம்புவ தாத்தா. எங்க எஜமானியம்மாவோட அண்ணங்காரரு தில்லுமுல்லு பண்ணி பெரிய பணக்காரரா ஆயிட்டாராம். திடீர்னு ஒரு நா ஒத்தரு அதெப்பத்தி புகார் கொடுத்து அவரைப் போலீஸ்ல மாட்டினாராம். அவமானம் தாங்காம அந்த மனுசன் விஷம் குடிச்சு சாவப் போறப்ப, அன்னெய கும்பிடறவரு தெய்வமா குறுக்க வந்து, அவரை மனச மாத்தி, தப்பு செய்யதில்லேன்னு அன்னைக்கு சத்தியம் செய்யினு கட்டாயப்படுத்தி-னாராம். அவரும் ஒன்னப்போல இதெ நம்பாமே விஷமே குடிக்கிறேன்னு அடம்புடிச்சாராம். அவரு புள்ளகணக்கா வளத்த பையன் அவருக்காக அன்னைகிட்ட வேண்டிக்கிச்சாம். அப்ப இவரும் மனசு மாறி தப்பே செய்யறதில்லேன்னு அன்னைக்கு சத்யம் செஞ்சாராம். அதே நேரமே உனக்கு ஜெயிலு இல்ல, மன்னிச்சுட்-டாங்கன்னு சேதி வந்திச்சாம். அதிலேர்ந்து அவரு நல்ல மனுஷனா மாறி இன்னும் பெரிய பணக்காரரா ஆயிட்டாராம். அதுக்கு விஸ்வாசமாத்தான் அடிக்கடி பாண்டிக்கு வருவாராம்” என்று ஏற்றியிறக்கி உணர்வோடு கூறினாள் வாணி.

“நடக்குமா புள்ள இது?” என்று அதிசயித்தார் தாத்தா.

“நடந்திருக்கே. அவுங்களே இதெல்லாம் எசமானியம்மாகிட்ட சொன்னத நானே கேட்டேனே. அதுல அவங்க ரொம்ப மாறிட்டாங்களாம். கோயில், பூஜை எல்லாம் விட்டுட்டாங்களாம். அன்னைக்கு ஏத்துக்கறாப்பல சுத்தமா, சத்தியமாக வாழ ஆசப்படறாங்களாம்”.

“அதெல்லாம் சரி புள்ள. அதுல ஒனக்கு என்னா சந்தோஷம் வந்திச்சு?”

“இருக்கு தாத்தா. புருசன் கைவிட்டார்ன்னு என்ன ஊரெல்லாம் குத்தமா பேசிச்சில்ல, அதெல்லாம் மாறி நான் புருஷன் கைவிட்ட கெட்ட பொண்ணில்ல, சாமிக்குச் சொந்தமான நல்ல பொண்ணுன்னு உலகம் சொல்லுற நல்ல நாள் வரப்போவுதுன்ற சந்தோஷம்தான்”.

“என்னவோ போ, எதுனா பேசி ஆறுதல் பட்டுக்கிற” என்று சோர்ந்துபோனார் தாத்தா.

“பொம்பளங்களப் பத்தியெல்லாம் அந்த அன்னையம்மா

ஒசத்தியா பேசியிருக்காங்க. ஆம்பள தொணைய நாடுறதவிட தெய்வத் தொணைய நாடுறது ஒசத்தின்னு பேசியிருக்காங்க. அவுங்க சக்தியைப் பாத்து எத்தனையோ பொம்பளங்க கல்யாணமே கட்டிக்கிடாம அவங்க சொன்ன சாமி வழியில வாழ்ந்தாங்களாமே'' என்று மெய்மறந்து பேசினாள் வாணி.

''ஆமாம் புள்ள, இதெல்லாம் கதைக்கு வேணாச் சரியாகும். வாழறத்துக்கு சரிவராது. புருஷனில்லாம என்ன வாழவேண்டியிருக்கு'' என்று அலுப்படைந்தார் தாத்தா.

''சரி தாத்தா. நா புருஷன வேண்டாமின்னு சொல்லலையே, அவுருதானே என்னெயப் புடிக்காம விட்டுப் போனாரு. அதுக்கு நான் என்ன செய்ய?'' என்றாள் ஏக்கம் ஏதுமில்லாமல்.

''அவ்வளவு சக்தி கொண்ட தெய்வங்றியே, அதெ வேண்டி உம் புருஷங்காரந் திரும்பி வர செய்ய முடியாதா?''

''முடியும் தாத்தா. மனப்பூர்வமா வேண்டினா கிடைக்கும். அப்போ அது எம் புருஷனுக்கு நா செய்யிற துன்பந்தானே அது?''

''ஏம்மா அப்படிச் சொல்லுற?''

''ஆமாந் தாத்தா. அது தம் மனசுக்குப் புடிச்ச பொம்பளயோட சந்தோஷமா வாழுது. புள்ளக்குட்டியும் ஆயிடிச்சு. இனிமே நா அதைப் பத்தி நெனக்கறது எதுக்குத் தாத்தா?''

''அப்ப, நீ வேற கல்யாணங் கட்டிக்கிட முடியுமா?'' என்று துயரப்பட்டார் தாத்தா.

''ஏன், நா மறுபடி ஒரு கல்யாணங் கட்டிக்கிடணும்?'' என்றாள் வாணி.

''உனக்குன்னு ஒரு பாதுகாப்பு வேணாமா?'' என்று பரிவாய்க் கேட்கிறார் தாத்தா.

''தாத்தா, உனக்குப் புத்தி போறல. தெய்வம் எல்லாத்தையும்விடப் பெரிசு தாத்தா. அது தராத பாதுகாப்பையா மனுசன் தருவாரு?'' என்று சிரிக்கிறாள்.

''எப்படிம்மா இது? எல்லாரும்தான் தெய்வத்தைக் கும்பிடறாங்க. அதுக்காக தெய்வம் நேருலயா வருது? இப்படி மனுஷ ரூபத்துலதானேம்மா வருது?''

*தொடரும்.....*

❀ ❀ ❀





## அனந்தம் பூஜ்யத்திலிருந்து எழுகிறது. நிகழ்காலம் பிறப்பதற்கு முன் அழிகிறது (P.77)

- ❒ இறைவன், பிரம்மம்என்பது அனந்தமானது, நித்தியமானது.
- ❒ அணு தன்னுள் அனந்தத்தைப் பெற்றுள்ளது.
- ❒ பிரம்மம் எடுக்க எடுக்கக் குறையாது.

  பிரம்மம் எவ்வளவு பெற்றாலும் வளராது.

  பிரம்மம் மனித மனத்தால் அறிய முடியாதது.

  பிரம்மம் மனித மனத்தின் புலன்களுக்கு பூஜ்யமாகக் காட்சியளிக்கும்.
- ❒ உலகில் பல்வேறு பொருட்கள் - மலை, நதி, சந்திரன், சூரியன், மனிதர், தாவரம், விலங்கு - உள்ளன. பல்வேறு நிகழ்ச்சிகளுண்டு. மனிதனுக்கு ஏராளமான சுபாவம், குணம் உண்டு.

***இவையத்தனையும் அனந்தமானவை.***
***அனந்தமில்லாத அம்சம் பிரபஞ்சத்திலில்லை.***

- ❒ நமக்குப் புரியாததை மனிதன் இல்லைஎன்பான்.

  அவனுக்குப் பயன்படாததையும் இல்லைஎன்பான்.

  அவன் புலன்கட்குப் புலப்படாததை இல்லை - பூஜ்யம் - என மனம் கூறுவது ஆச்சரியமில்லை.
- ❒ என் கண்ணுக்குத் தெரியவில்லைஎனக் கூறும் அடக்கமில்லாத நேரம், அவன் கண்ணில் படாதது இல்லை, பூஜ்யம்என அவன் கூறுகிறான்.

  பூஜ்யம்என மனிதன் கூறுவது இல்லைஎன்று பொருளில்லை. அவனுக்குப் புரிவது, பயன்படுவது,

புலப்படுவது எதுவும் இல்லைஎனப் பொருள்.

- பூஜ்யம்என மனம் கூறுவது அனந்தம்.

  சீனுவாச ராமானுஜம் பூஜ்யம் இறைவன்; அனந்தம் சிருஷ்டி என்றார்.

  பூஜ்யம்என்ற கருத்தைக் கண்டவர் இந்தியர்என்பது குறிப்பிடத்தக்கது.

- நிகழ்காலம்என சொல் ஆரம்பிக்குமுன் அது கடந்த காலமாகிறது.

  காலம் உண்டு. நிகழ் காலம், கடந்த காலம், எதிர்காலம் என்பன மனம் பிரித்தது.

  அப்பிரிவினையில் உண்மையில்லை.

  காவிரி நதி, அதை அந்தந்த ஊரில் ''எங்கள் ஆறு'' என்கிறார்கள். காவிரி பல ஊர்கள் வழியே செல்வது போல் காலம் பல நிகழ்ச்சிகள்மூலம் ஓடுகிறது. காலத்தில் பகுதியில்லை.

  பிரிவினை - 3 காலம் - மனம் செய்வது.

- காலம்என்பது ஆன்மா தன்னையறிவது. தன் அசைவை ஆன்மா காலமாக அறிகிறது.

  காலம் ஆன்மாவின் அகம்.

  இடம் ஆன்மாவின் புறம்.

  காலத்தில் உற்பத்தியான செயல் இடத்தில் வெளிப்படு- கிறது.

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## அதிர்ஷ்டத்தை ஏற்பதும், விலக்குவதும்

நடக்கும் செயலெல்லாம் சூட்சுமத்தில் உருவாகி ஜடத்தில் வெளிப்படுபவை. M.P.யாக இல்லாத நரசிம்ம ராவைப் பிரதமர் பதவி தேடி வந்ததுபோல் ஜடத்தில் உருவாக்கப்படாமல் காரியம் நடப்பதுண்டு. அது அதிர்ஷ்டமுள்ளவர்க்கு நடப்பதில்லை. அருள் உள்ளவர்க்கே நடக்கும். ரூ.700 கொடுத்து வாங்க வேண்டிய DVD வந்துவிட்டது. பணம் கொடுத்தது நினைவில்லை. விற்றவர் பணம் வந்துவிட்டதாகக் கூறுகிறார். தன் கணக்கை எடுத்துப் பார்த்தால் தனக்குரிய 2 கணக்கிலும் பணம் குறையவில்லை. ஒரு புதிராக இருந்தது. இதைக் கண்டுகொண்ட 4 மணி நேரத்தில் 6 லட்சம் பணம் எதிர்பாராமல் வந்தது. இத்தொகை வந்தது ரூ. 700 அருளால் வந்தது கணக்கிலிருந்து எடுக்கப்படவில்லை எனக் கூறுகிறது. இதன்முன் நாள் அவர் மனைவி 3 நாள் பிரார்த்தனையில் உட்கார்ந்திருக்கிறார். அதன் இரண்டாவது முடிவு மிகப்பெரியது. அன்பர் செய்யக்கூடியவை இரண்டு:

1) ரூ. 700 அருளால் சூட்சுமமாக வந்ததுஎன ஏற்றால் சூட்சுமக் கதவு திறக்கும், மனைவியின் பிரார்த்தனையில் அது தெரியும்.

2) துருவித் துருவி ஆராய்ச்சி செய்து ரூ. 700 தடயம் கிடைக்காவிட்டால் அருள் தொடர்ந்து செயல்படுவதாய் அர்த்தம். தடயம் கிடைத்தால் சூட்சுமம் கொடுத்த அருளை அன்பர் ஜடமாக மாற்றினார்எனப் பொருள்.

*Pride and Prejudice* இல் டார்சி காதலை உற்பத்தி செய்து கரைகிறான். எலிசபெத் அதை அறியாமல் அவனைத் திட்டுகிறாள். மேலும் நெகிழ்ந்து கரைகிறான். லிடியா ஓடிப்போய் அவமானமாகிறது. மீண்டும் வந்து அவளை ஏற்கிறான். அருளாக டார்சி வற்புறுத்தி செயல்படும்பொழுது எலிசபெத் அவனை வரனாக ஏற்றுக் குறைபடுகிறாள். ‘‘என்னிடம் பேசாவிட்டால் நான் மறந்துவிடுகிறேன்’’ என்று தனக்கே கூறிக்கொள்கிறாள். அவளுக்குமட்டும் லிடியா, ஜேன் திருமணங்களை டார்சி நடத்தியது தெரியும். தெரிந்தும் குறைப்படுகிறாள். சந்தேகப்படுகிறாள். நம்பிக்கை எழவில்லை. கடைசிவரை அவளுக்கு அவன் மீது மரியாதையும் நன்றியும் எழுந்ததே தவிர அன்பு, பிரியம் எழவில்லை. அதுவே உத்தமமான எலிசபெத் போன்றவர் மனம் கூறுவது.

*அருளில்லாமல் அன்பு சுரக்காது.*

❀❀❀

## பகவான் குதிரை சவாரி

ICSஇல் குதிரையேற்றம் உண்டு. பகவான் அதற்குப் போகவில்லைஎன்பதால் ICS பாஸ் செய்யவில்லை. Online பத்திரிகையொன்றில் இதுவரை நானறியாத விளக்கம் ஒன்று வந்துள்ளது.

மோதிலால் ராய்என்பவர் வீட்டில் பகவான் சந்திர நாகூரில் தங்கியிருந்தார். மனைவியை அங்கு விட்டுவிட்டு புதுவை வந்தார். பகவானிடமிருந்து தான் கேட்டறிந்ததை மோதிலால் எழுதுகிறார்.

‘‘குதிரையேற்றத்திற்குமுன் நான் உள்ளே ஆழ்ந்து அமிழ்ந்தேன். ஓரளவு மயக்கமான நிலை. இரு கனவுகள் எழுந்தன. பிரிட்டனுடைய குலதெய்வத்தைக் கண்டேன். அடுத்தாற்போல் இந்திய சக்ரவர்த்தியின் அரியாசனத்தை நோக்கிப் போகிறேன். அவள் என்னை சிரித்த முகத்துடன் பல பாராட்டுகளைக் கூறி வரவேற்கிறாள். அடுத்த நிமிஷம் ஒரு சன்னியாசி வருகிறார். திரிசூலம் தாங்கி வருகிறார். இந்தியப் பண்பாட்டின் மந்திரத்தை எனக்குத் தருகிறார். அவர் என்னை எழுப்பினார். அவர் கொடுத்த செய்தியை நான் இலட்சியமாய் ஏற்றேன். நான் குதிரையேற்றப் பரிட்சைக்குப் போகவில்லை’’.

- வேறொரு கனவில் இந்திய மண்ணில் புதைந்துள்ள அத்தனை பொக்கிஷங்களையும் அவர் கண்டார்.
- அன்பர் கனவில் பகவான் இந்தியா படத்தின் மீது படுத்திருப்பதாக, தலை சிங்கப்பூரிலும், உடல் புதுவையிலும், கால் அரபிக்கடலிலும் இருப்பதாகத் தெரிவது வழக்கம்.
- பகவானை கனவிலும், சூட்சுமத்திலும், தியானத்திலும் காண்பவர் அநேகர். தேச பக்தர்கள் கனவில் பகவானை பாரத் மாதாவுடன் இணைத்து வருவதுண்டு.

❀❀❀

June 2010 Jiviyam 16 Malar 02
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள் ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

SATYA JYOTHI ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191